31

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

4

விஜயாவின்
கல்யாணம் பண்ணிப்பார்
(தமிழ்)
டைரக்ஷன்... ப்ரசாத்
நாகிரெட்டி & சக்ரபாணி தயாரிப்பு...

பொருளடக்கம்

மலர்: 3 இதழ்: 4

குழந்தைகளே !	பக்கம் ..	2
ஜம்பு - 'ஆர்வி' ..	.. ..	3
குளிகைத் தீவு - சித்திரக் கதை	..	9
நம்பர் ஆட்டம்—என். சந்திரன்	..	13
இயற்கை விநோதங்கள்-வே. ரா. சுந்தரராமன்		14
எங்கள் ஊர்—ஆர். எஸ். ராஜகோபால்	..	16
தேன் பறவை - சம்பா ..	..	18
பெரிய தொகை - ராம. சண்முகம்	..	19
அதிருஷ்டமா? - டி. கே. அபர்ணா	..	21
இரு சகோதரர்கள் - 'குகப்ரியை'	..	23
எண்ணிலே படங்கள் - 'மூட்டை'	..	26
வரண்டுப் பயல் - என். எஸ். ஸ்ரீ.	..	27
பட்டுப் பாவாடை - எஸ். வி. ரமணி	..	30
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	..	35
சந்நியாசமா, சம்சாரமா?-எஸ். ரங்கநாயகி ..		37
நொண்டிச் சிறுவன் - கே. ஏ. நம்பி	..	42
பொழுது போக்கு - வி. அநஸூயா	...	44
எக்ஸ்-ரே - புரொபஸர் விஞ்ஞானம்	..	45
நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர்	..	49
கேட்டீர்களா !	..	52
கண்ணன் தபால் -	..	53

சென்னையில் கண்ணன் ஏஜெண்டு:
ஸ்ரீ V. பரமசிவ நாடார்,
நேரு நியூஸ் ஏஜென்ஸி,
லஸ், சென்னை, 4.

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

நல்ல வெயிலுடன் ஏப்ரல் மாதம் பிறந்துவிட்டது. ஒரு வாரம், பத்து நாள் என்று நாள் கணக்கில் பரீட்சை உங்கள் எதிரே நிற்கிறது. உங்களுக்கு இரவு பகல் நிம்மதியிராது. முழு மூச்சுடன் பாடங்களைப் படிப்பீர்கள். மறந்துபோனவற்றை யெல்லாம் நினைவுக்கு இழுத்து வந்து நிறுத்திக்கொள்வீர்கள்.

பரீட்சையைக் கண்டு பதருமல் நீங்கள் வெகு நன்ருக விடைகள் எழுதவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். கண்ணன் படிக்கும் குழந்தைகள் எல்லாரும் பரீட்சையில் முதலாவதாகத் தேறுவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்த கண்ணன் உங்கள் விடுமுறையின் ஆரம்ப நாட்களில் கிடைக்கும். நீங்கள் எந்த ஊரிலிருந்தாலும் உங்கள் விடுமுறை[illegible] சரியான வழியில் கழிக்கக்கூடிய விதத்தில் கண்ணன் வெளிவருவ[illegible] உங்கள் விடுமுறைக்குச் சரியான வேலை ஒன்றையும் உங்களு[illegible] கண்ணன் கொடுக்கப்போகிருன்; இப்போதே சொல்லிவிட்டேன்.

சென்ற இதழில் கண்ணன் மாதப் பத்திரிகையாக இருக்கல[illegible] மாதமிருமுறையாக இரண்டணு அல்லது மூன்றணு வி[illegible] இருக்கலாமா என்று கேட்டிருந்தேன். இதற்குப் பல குழந்தை[illegible] பதில் எழுதியிருக்கிருர்கள். இன்னமும் பதில்கள் வந்துகொ[illegible] தான் இருக்கின்றன. சிலர் எழுதியனுப்பியவற்றைப் படித்தா[illegible] மாதப் பத்திரிகையாகவே இருந்துவிட்டுப் போகட்டும் என்று தோன்றுகிறது. இன்னும் சிலர் எழுதியிருப்பதைப் பார்த்தால் மூன்றணு விலையில் மாதமிருமுறை யாக்கிவிட்டுத்தான் மறுவேலை பார்க்கவேண்டும் என்று தோன்றுகிறது. இவ்வளவு தூரம் குழந்தைகள் ஒரு நிச்சயமான முடிவைத் தெரிவித்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எல்லாக் கடிதங்களையும் சேர்த்துப் பார்த்து எவ்வளவுபேர் மாறுதலை விரும்புகிருர்கள், எவ்வளவு பேர் மாறுதலை விரும்பவில்லை என்பதையும், எங்கள் முடிவையும் அடுத்த இதழில் வெளியிடுகிறேன். இன்னொரு முக்கியமான செய்தியையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குழந்தைகள் மட்டுமல்லாது அவர்களுடைய தாய் தந்தையரும், சகோதரிகளும் கண்ணனைப் படிப்பதாகத் தெரிகிறது. எப்படித் தெரிந்தது என்ருல் அவர்களில் பலரும் தங்கள் அபிப்பிராயத்தை வலுவிலே எழுதித் தெரிவித்திருக்கிருர்கள். இது எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது. தங்[illegible] குழந்தைகள் படிக்கும் விஷயங்கள் யாவை, அவை எப்படி யிரு[illegible] வேண்டும் என்பதைக் கவனிக்கும் தாய்மார்களும் தந்தையரு[illegible] இருப்பது கண்டுதான் எனக்குப் பெருமகிழ்ச்சி. வந்த கடிதங்களி[illegible] சிலவற்றை அடுத்த இதழில் வெளியிட எண்ணியிருக்கிறேன்.

இந்த இதழில் வழக்கமான அம்சங்கள் புதுமையுடன் வெ[illegible] யாகி யிருக்கின்றன. எல்லாம் உங்கள் ஓய்வு நேரத்தை உல்ல[illegible] மாக்கும் என்று நம்புகிறேன். மூளைக்கு ஒரு புதுத் தெம்பை[illegible] கொடுத்து, பரீட்சைப் பாடங்களில் ஒரு புது மலர்ச்சியுடன் உங்க[illegible] ஈடுபடச் செய்யும் என்றும் நம்புகிறேன். எங்கே, நூற்றுக்கு [illegible] என்றும் தொண்ணூறு என்றும் மார்க்கைத் தட்டிக்கொண்டு வா[illegible] கள், பார்க்கலாம்! மே மாதக் கண்ணன் இதழை ஏப்ரல் 30-[illegible] தேதிக்குள்ளேயே உங்களுக்குக் கிடைக்க நான் வழிசெய்கிறேன். பிறகு சந்திப்போம்! ஜய் ஹிந்த்!

—ஆசிரியர்.

ஜம்பு

ஆர்வி

4

கருகும்மென்று கடற்கரை எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. ...ஹா' என்ற இரைச்சலுடன் ...கள் வெண் நுரைகளைக் கக்கிக் ...ண்டு புரண்டு புரண்டு விழுந் ... ஆகாயத்தில் மின்னிய நட்சத் ...ங்கள் கூட கருமேகங்களினுள் ...றந்து கிடந்தன. பூமியே ...டிந்துவிட்டதுபோல அப்படி அந் ...தப் பிரதேசமே இருளடர்ந்து கிடந்தது.

மணி எழு ஆயிற்று. லாஸரஸ் சர்ச்சு மணி டணார், டணார் என்று காற்றில் எதிர்த்து வந்து ஒலித்தது. ஸாந்தோம் பீச்சிலிருந்து செம்படவர்களின் குடிசைகள் இரண்டு பர்லாங்குத் தூரத்தில் இருந்தன. முணுக் முணுக்கென்று சிமிணி விளக்கின் வெளிச்சம் மட்டும் சற்றைக்கு ஒரு தரம் மங்கலாகத் தெரிந்தது. இருள் பரந்த மணல் வெளியில் கடல் நண்டுகள் ஊர்ந்து ஓடின. கட்டு மரங்களும் வலைகளும் பரத்தப்பட்டுக் கிடந்தன. ஒரே வலை நாற்றம் வயிற்றைப் புரட்டி ...து. எங்கும் பயங்கரமே சூழ்ந் ...ிருந்தது.

...ஸாந்தோம் பீச்சு வழியாக இப் ...ாது மூன்று உருவங்கள் அந்த ...ருள் பிரதேசத்துக்குள் நுழைந் ...ன. மூன்று உருவங்களில் ...ன்றைத் தவிர மற்ற இரண்டு உருவங்களும் பெரியவை.

கடற்கரை ஓரமாக ஒரு குறிப்பிட்ட இடம் வந்தது. மூன்று உருவங்களும் ஒரு தோணியின் மறைவில் நின்றன. சற்றுத் தூரத்தில் ஒரு பனை ஓலைக் குடிசை கரும் பூதம் போலத் தெரிந்தது.

பெரிய உருவம் ஒன்று 'சரக்' கென்று நெருப்புக் குச்சியைக் கிழித்துக் கைக்கெடியாரத்தில் மணியைப் பார்த்தது.

"அடேயப்பா! மணி எட்டாகப் போகிறதே! ஒன்றையும் காணோமே!" என்றது அந்த உருவம், மெல்லிய குரலில்.

மற்ற இருவரும் இதற்குப் பதில் சொல்லவில்லை.

சற்றைக்கெல்லாம் இருட் கடலையே பார்த்துக்கொண்டிருந்த சின்ன உருவம், "அதோ, அதோ! கடல் நடுவே ஒரு சிவப்பு விளக்கு!" என்று கூவியது.

"அது ஏதோ ஹார்பரிலிருந்து போகும் கப்பல்!" என்றது பெரிய உருவம்.

"சிவப்பு விளக்கும் பச்சை விளக்கும் மாறி மாறித் தெரிகிறதே!"

"அது நாகப்பட்டணம் வழியாக இலங்கை போகும் கப்பலாக இருக்கும்!"

சிறிது நேரம் மௌனம்.

"வர வர வெளிச்சம் பிரகாசமாகத் தெரிகிறதே! இது தெற்கேயிருந்து வருகிறது, ஸார்!"

"வருகிறதோ, போகிறதோ-ஏதோ ஒன்று. அதற்கு என்ன வந்தது இப்போது!"

இந்தச் சமயத்தில் கடற்கரை ஓரத்தில் ஏதோ 'கடகட...டர்... டர்' என்ற ஓசை பலமாகக் கேட்டது. மூவரும் இருளில் கரையோரமாகத் திரும்பிப் பார்த்தார்கள். பளிச்சென்று ஒரு வெளிச்சம் சற்றுத் தூரத்தில் தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் நீளமாகச் சிவப்பு வர்ணத்தில் ஒரு பொருள் தெரிந்தது. மோட்டார் ஓட ஆரம்பிப்பது போன்ற சத்தமும் கேட்டது.

அலையோசைக்கு நடுவே, "எல்லாம் ரெடியா, கந்தா?" என்று ஒரு குரல் வந்தது.

"ரெடிதான் அண்ணே!" என்ற பதிலும் காதில் விழுந்தது.

அடுத்த கணம் மீண்டும் வெளிச்சம் ஒரு தடவை கண்ணைப் பறித்து விட்டுப் போயிற்று. அந்தச் சிவப்புப் பொருள் கடலில் சீறிக்கொண்டு சென்றது. அப்போதுதான் அது ஒரு மோட்டார் படகு என்று இந்த மூவருக்கும் தெரிந்தது.

"அதுதான், அதுதான்...நான்தான் சொன்னேனே..." என்றது சின்ன உருவம்.

"சரி; எல்லாம் பொறுத்து இருந்து பார்ப்போம்!" என்றது பெரிய உருவம்.

மூவரும் கம்மென்று நின்றவாறு கப்பலின் வெளிச்சத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். கரையிலிருந்து சென்ற மோட்டார் படகு கடலில் அம்புபோலச் சீறிக்கொண்டு சென்றது. மோட்டார் படகு, கப்பலை நெருங்கிவிட்டது. ஐந்து, பத்து, பதினைந்து நிமிஷங்கள் ஓடின. திடீரென்று கப்பல் விளக்கு அணைந்தது. மோட்டார் படகின் வெளிச்சமும் தெரியவில்லை. மீண்டும் ஒரே இருள்தான். கண்ணைக் குருடாக்கும் இருள்!

கரையில் நின்ற மூவரும் யார் என்று தெரிந்துகொள்ளுவதற்கு முன்பாக, கப்பலில் என்ன நடந்ததென்று பார்க்கலாம்.

மோட்டார் படகில் மூன்று பேர் இருந்தார்கள். படகு கப்பலை நெருங்கியதும் அதிலிருந்து ஓர் ஆள் கப்பலிலிருந்து தொங்கிய ஏணி வழியாக உயரே ஏறிச் சென்றான். கப்பலில் மாலுமி உடையி இருந்த ஒருவன் இவனைக் க டதும் கைகுலுக்கி, "ஸாந்தே தானே?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றான் ஏறிச்சென்ற மனிதன்.



"அடையாளச் சொல் என்ன?" என்று கேட்டான் கப்பல் மாலுமி.

"சர்க்கஸ்!"

"ரைட்டோ!" என்று சொல்லி விட்டு மாலுமி ஓர் அறைக்குள் நுழைந்தான். அடுத்த சில நிமிஷங்களில் ஒரு சிறிய சூட்கேஸுடன் வெளியே வந்தான். படகில் வந்தவன் தன்னுடைய பெல்டில் தொங்கிய ஒரு பெரிய தோல் பையை உருவி எடுத்தான். விளக்கு வெளிச்சத்தில் அவன் கையில் பல ...த்தை நோட்டுக்கள் இருப்பது ...தரிந்தது.

"எவ்வளவு?" என்றான் மாலுமி.

"இரண்டு லட்சம்!"

"சரி; தாங்க்ஸ்! இதோ சாவி!"

அடுத்த கணமே வந்தவன் சாவியை வாங்கி உள் சட்டைக்குள் வைத்துப் பத்திரப்படுத்திக்கொண்டான். அந்தச் சிறிய தோல் சூட்கேஸைத் தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு ஏணி வழியாகப் படகில் இறங்கினான். இருவரும் கையைத் தூக்கி விசிறி விடைபெற்றுக் கொண்டார்கள்.

படகு புறப்பட்டது.

கப்பலும் ஹார்பரை நோக்கிப் புறப்பட்டது. கப்பலில் இருந்த பிரயாணிகளுக்குக் கப்பல் நின்றதும் படகு ஒன்று வந்து நின்றதும் தான் தெரியுமே ஒழிய அங்கே மேற்கொண்டு நடந்தவை எதுவும் தெரியாது. இது ஏதோ 'செக்கிங்'

போல இருக்கிறது என்று எண்ணி யிருப்பார்கள்.

மேலும் சில நிமிஷங்கள் சென்றன. படகு கரையை அடைந்தது.

"கந்தா, முதலில் நீ இறங்கு!" என்று உத்தரவிட்டான் தோல் சூட்கேஸை வைத்திருந்தவன்.

கந்தன் முதலில் இறங்கி மோட்டார் படகை அலையில் ஆடாமல், அசையாமல் பிடித்துக்கொண்டான்.

"ஒருவரும் இல்லையே!"

"இல்லை, அண்ணே!"

மூன்றாவது ஆசாமிதான் படகை ஓட்டிவந்தவன். அவனும் சூட்கேஸ் ஆசாமியும் தரையில் இறங்கி, குடிசையை நோக்கி நடந்தார்கள். கந்தன் படகைக் கரைக்கு இழுத்து

மணி: ஏண்டா, முகம் வீங்கி யிருக்கிறது?

ராமு: எங்கப்பா ஒரு புட்பால், இரண்டு வாலிபால் கொடுத்தார். அதனாலே...

மணி: அப்படின்னா?

ராமு: காலாலே ஒண்ணு, கையாலே இரண்டு குத்துக் கொடுத்தார். புரியல்லியா?

—கங்கம்மாள்.

வந்து அதன் பாகங்களைப் பிரித்துக் கழற்றினான். சூட்கேஸ் ஆசாமி குடிசைக்குள் நுழைந்ததும், "ராஜு, படகை உள்ளே பத்திரப் படுத்தி வைத்துவிட்டுச் சீக்கிரம் புறப்படு! கந்தனிடம் பேசியபடி இந்தப் பத்துப் பத்து ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்துவிடு!" என்றான்.

எல்லாம் சில நிமிஷ நேரங்களில் திட்டப்படி நடந்து முடிந்தன.

"புறப்படலாமா?" என்றான் ராஜு.

"ஓ!" என்றான் சூட்கேஸ் ஆள்.

இருவரும் இருளில் வெகு நிதானமாக நடந்து, செம்படவர்களின் குடிசையைச் சுற்றிக்கொண்டு சென்றனர். பின்னால் யாரோ வருவதுபோலத் தெரிந்தது. ஆனால் இருளில் ஒருவரையும் பார்க்க முடியவில்லை. டார்ச் விளக்கு மிகவும் மங்கலாக இருந்தது. விளக்கு வெளிச்சத்துக்கு அருகில் ரஸ்தா ஓரமாக வந்த போது, "நில்லுங்கள்!" என்று பின்னாலிருந்து ஓர் அதட்டல் சத்தம் வந்தது.

ஆனால் அவர்களுடைய நடை வேகமாக விழுந்தது. 'டக் டக்' என்ற ஓசை பின்னால் வேகமாகக் கேட்கக் கேட்க அந்த இருவருடைய பெருநடை சிறு ஓட்டமாக மாறியது.

"டேய்! உங்களைத்தான்!"

ஆனால் அதற்குள் அங்கே ஒரு குடிசை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருவரும் ஏறிக்கொண்டார்கள். கண்மூடிக் கண் திறப்பதற்குள் மோட்டார் சைக்கிள் கடகடவென்று சப்தத்துடன் புறப்பட்டு ஓடத் தொடங்கியது.



பின்னால் ஓடிவந்த மூவரும் ஹைரோடு வரையில் மோட்டார் சைக்கிளைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்தார்கள். என்ன பிரயோஜனம்? அதற்குள் மோட்டார் சைக்கிள் வளைவு திரும்பிவிட்டது. மூவரும் ஹைரோடு முனைக்கு வந்தபோது மோட்டார்சைக்கிள் முக்கால் பர்லாங்குத் தூரத்தில் சென்றது. அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அடையாறு போகும் மார்க்கத்தில் மோட்டார் சைக்கிள் பறந்தது.

"வாருங்கள்; முடிந்த வரையில் ஓடுவோம். அதற்குள் வழியில் ஏதாவது ஒரு மோட்டார் வந்தாலும் வரும். எப்படியோ பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறியது சின்ன உருவம்.

இப்போது அந்தச் சின்ன உருவத்தின் முகத்தில் நன்றாகத் தெருவிளக்கின் வெளிச்சம் விழுந்தது. ஆம்; அந்த உருவம் வேறு யாருமில்லை! சாக்ஷாத் ஜம்புவேதான்!

மற்ற இருவரும் யார்? புதிய முகங்களாய் இருக்கின்றனவே? ஆம்; அந்த முகங்கள் நமக்குப் புதியவைதாம். ஆனால் தென் சென்னை வாசிகளுக்கு அவர்களில் ஒருவருடைய முகம் நன்றாய்த் தெரியும். மேலும் 'நீல மாளிகை' படத்துக்குப் போயிருந்தவர்கள் தீப்பிடித்த விசாரணையைப் பார்த்திருந்தால் அங்கே அவர் வந்திருந்தது தெரிந்திருக்கும். அவர் என்னதான் சாதாரண உடையில் இருந்தாலும் அவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரசாத் என்பதைப் பச்சைக் குழந்தைகூடச் சொல்லிவிடும். 'மப்டி'யில் இருக்கும் மற்றொருவர் போலீஸ் கான்ஸ்டபிள் '601' என்ற நம்பருள்ள ஆறுமுகம்தான்! இன்ஸ்



நகப்பஞர் : டேய் பாலு, நீ படிக் கிருயா, இல்லையா என்று பார்ப் பதிலேயே எனக்குப் பாதி நேரம் போய்விடுகிறது!

பாலு : அப்பா, நீங்கள் என் னைப் பார்க்கிறீர்களா, இல்லையா என்று கவனிப்பதிலேயே எனக்கு முழு நேரமும் போய் விடுகிறது.

—சம்பத்குமார்.

பெக்டர் பிரசாத்துக்கு வலது கை போன்றபோலீஸ்காரன் ஆறுமுகம்.

'இவர்கள் எப்படி ஒன்று சேர்ந் தார்கள்? எப்படி இந்தக் கடற் கரைக்கு வந்தார்கள்?' என்றெல் லாம்தோன்றுகிறதல்லவா? அதைச் சொல்ல அதிக நேரம் பிடிக்காது தான். இருந்தாலும் இப்போது அதைச் சொல்லிக்கொண் டிருந் தால் மோட்டார் சைக்கிளில் போனவர்களை எப்படிப் பின்பற்றிச் செல்வது? ஆகவே, பின்னல் அதைப் பார்த்துக் கொள்ளலாம். இப்போது இவர்கள் என்ன செய் தார்கள் என்பதைமட்டும் கவனிப் போம்.

ஒரு நிமிஷநேரம் அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரிய வில்லை. உடனே இன்ஸ்பெக்டர் பிரசாத் ஆறுமுகத்தைப் பார்த்து, "நீ ஸ்டேஷனுக்கு முதலில் ஓடு. அங்கிருந்து பத்துப் போலீஸாரை வானில் ஏற்றிக்கொண்டு மந்தை வெளி வழியாக வா!" என்று சொல்லிவிட்டு ஜம்புவுடன் கால் நடையாக ஓட்டம் பிடிக்கலாஞர்.

சர்ச்சுக்கு அருகில் இவர்கள் இரு வரும் ஓடிவந்தபோது நல்ல கால மாக ஒரு பஸ் 'ஷெட்' என்ற போர்டை மாட்டிக்கொண்டு எதிரே வந்தது. இன்ஸ்பெக்டர் பிரசாத் குழலை எடுத்து ஊதினுர். பஸ் நின் றதும் இருவரும் அதில் ஏறிக் கொண்டார்கள்.

"டிரைவர்! நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரசாத்! உடனே வண்டியைத் திருப்பித் தெற்கே போகும் இந்தச் சாலை வழியாகப் போ!" என்ருர்.

இதற்குள் பல சந்து பொந்து களில் நுழைந்து மோட்டார் சைக்கிள் போன இடம் தெரியாமல் போய்விட்டது.

மோட்டார் சைக்கிள் போன சந்துகளில் நுழையவே முடியாமல் பஸ் மெயின்ரோடு வழியாகவே போயிற்று. கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் மோட்டார் சைக்கிள் போகும் அறிகுறியே காணவில்லை.

இனி என்ன செய்வது, எங்கே என்று பஸ்ஸை ஓட்டுவது என்பது புரியாமல் டிரைவர் விழித்தான். அவனை எங்கே ஓட்டச் சொல்வது என்று புரியாமல் பிரசாத்து விழித்தார். ஜம்புவும் அவர்க என்ன யோசனை செய்கிருர்கள் என்பதைப் புரிந்துகொள்ளாமல் விழிவிழி என்று விழித்தான்.

(தொடரும்)

குளிகைத் தீவு
கதை ஆர்வி சித்திரம் : சங்கர்...
மந்திரவாதி குகைக்குள்ளே நுழைந்து செல்கிறன்
அங்கே சீரகனும் நாகநந்தன் கொலை செய்த கபட்டுச் சந்நியாசியும் இருந்தார்கள்
சீரகா! அந்த ராஜகுமாரனிடமிருந்து குளிகையைக் கைப்பற்ற வேண்டும்! பிறகு உன் சகோதரியே பட்டத்து அரசி! நீ ஒரு மந்திரி!
தாங்கள்?
நானா? ஹஹ் ஹஹ் ஹா! எனக்காகவே உன் சகோதரியை என் தாய் வளர்த்தாள்! ஹஹ் ஹஹ் ஹா!
அடே கபட்டுச் சந்நியாசியே! இரு, உனக்கு சரியான வழி வைக்கிறேன்! இப்படியா உன் எண்ணம்?
சீரகா! ஒன்று கேட்க மறந்து விட்டேன். நாம் மலையில் கொண்டு வந்து போட்ட மந்திரவாதிப் பயல் எங்கே
வெளியே தான் எங்கேயாவது சுற்றிக் கொண்டிருப்பான்
எதற்கும் நாம் இந்தக் குகை வாயிலை மூடி விட்டுச் செல்வோம்!
வெளியே சென்ற சந்நியாசியை, சீரகன் உதவியுடன் நாகநந்தன் கொன்றதோ, அதன் பிறகு கடலில் விழுந்ததோ குகைக்குள் அடைபட்டுக் கிடந்த மந்திரவாதிக்குத் தெரியாது.
கடலில்.....
கைசளைத்துப்போன நாகநந்தனை கூரக்கழுகு திரும்பிவந்து, கால் நகத்தால் அவன் இடுப்பைப் பற்றிக் கொண்டு அருகிலுள்ள தீவில் இறக்கியது.
அந்த வழியாக ஐந்தாறு பெண்கள் சுனைக்கு நீராடச் செல்ல வருகிறார்கள்
அதோ பாரடி! யாரோ ஒரு மனிதன்!
யாரோ தெரியவில்லை பாவம் மயக்கமாயிருக்கிறர்
நல்லவேளை! மூச்சு இருக்கிறது
ராஜகுமாரன் போலிருக்கிறது
இனி பயமில்லையடி! இவர் கண் விழிப்பதற்குள் நாம் நீராடி விட்டு வரலாம்
கூரக் கழுகு எங்கே?

மிகவும் அழகாய் இருக்கிறான்
எப்படி இந்தத் தீவுக்கு வந்தானோ தெரியவில்லை!
கூர்க்கழுகே! இங்கேயே இரு நான் ஆகாரம் தேடி வருகிறேன்
அருமையான பழங்கள்! ஆகா, என்ன ருசி!
வழி தவறி விட்டதே! என்ன செய்வது?
அடுத்த கணம் காட்டு மனிதர்கள் நாககந்தனைச் சூழ்ந்து கொள்கிறார்கள்...
நாககந்தன் முடிந்தவரையில் போராடுகிறான்...
யாரோ ஒற்றன் இவன்!
வழக்கம்போல் நாகா நகர அரங்கத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்!
மறு நாள் மாலை...
பசியுடன் அடைத்திருந்த சிங்கம் உறுமுகிறது...
அசுர வேகத்துடன் நின்ற நாககந்தனை நோக்கிப் பாய்கிறது சிங்கம்
சிங்கத்திடம் குனிந்து பக்கவாட்டில் ஒதுங்கிக் கொண்டு விடுகிறான் நாககந்தன்...

சிங்கம் விழுந்தது!
உத்தரவு!
ஆ! ஒரு சிறுவன் ராஜசிம்மத்தைக் கொன்று வீழ்த்துவதா? அழைத்து வாருங்கள்! நம் நாட்டு மல்லன் இடும்பனை!
அரங்கமேடையிலிருந்து அந்தப் பெண்கள் பழங்களை தூக்கி எறிகிறார்கள்...
நாகநந்தனும் இடும்பனும் பொருதுகிறார்கள்
விடாதே!
அடி! நொறுக்கு!
மண்ணைக் காட்டு!
இடும்பா! விடாதே!
ஹைய்! பயலே!
ம்!
ஆ!!!!
அடுத்த கணமே காலால் இடும்பனைக் கீழே தூக்கித் தள்ளி மேலே ஏறி, சிங்கம் போல அமருகிறான்!
இடும்பனையும் வென்ற மகா வீரனே! சபாஷ்! தமிழரின் வீரத்தைக் கண்டோம்!
மறு நாள்
உன்னால் ஒரு உதவி ஆகவேண்டும். உன்னைத் தவிர வேறு யாராலும் ஆகாது! முடியுமா?
முடியும்! சொல்லுங்கள்!
ஒரு பெரிய மண்டபத்திற்கு ௯௯௯ கால்கள் கட்டி விட்டோம் கடைசிக்கால் மட்டும் கட்டின மறுநாள் காலையே விழுந்து விடுகிறது! அதை ஒரு பூதம் காவல் காக்கிறதாம்!
அப்படியா?
இன்று இரவு என் ஆரக் கழுகுடன் காவல் இருக்கிறேன்! பார்க்கலாம்!
நாகநந்தனும் தலைவனும் அந்த மண்டபத்தைப் பார்வையிடுகிறார்கள்
இரவில் நாகநந்தன் உருவிய வாளுடன் காவல் புரிகிறான்
மூன்றாம் சாமத்தில்...
இது ஏதோ புரளி! ஒன்றையும் காணோமே!
நாகநந்தன் கண்ணயர்ந்த சமயம் பின்னால் கரிய பயங்கரமான உருவம் சத்தம் போடுகிறது.
ஹோ!

ஹ ஹ்.. ஹ ஹ்..ஹா! காவலா? நான் யார் தெரியுமா?
நீ யாராய் இருந்தால் என்ன? அந்தத் தூணைத் தொட்டாயோ, தெரியுமா?
ஹோ, ஹோ!
பூதம் அவனை உயரே விட்டெறிகிறது...
சூரா!
கழுகு உடனே ஆகாயத்தில் எழும்பி அவனை முதுகில் தாங்கிக் கொள்கிறது..
சூரா பூதத்திற்கு அருகே போ! ஒரே வெட்டாய் வெட்டி வீழ்த்துகிறேன்!
நாகநந்தன் கழுகின் முதுகிலிருந்தபடியே பூதத்தின் கையை வெட்டி வீழ்த்துகிறன் ஆனல் அந்தக் கை அதன் உடலோடு போய்ச் சேர்ந்து கொள்கிறது
பயலே!
சூரா! இந்தத் தடவை ஜாக்கிரதை! தவறக் கூடாது!
ஆமாம்!
இந்தத் தடவை மற்றொரு கையை வெட்டிச் சாய்க்கிறன் அவன்..
இந்த விதமாகப் பல முறை நாகநந்தன் பூதத்தை வெட்டுவதும், அதன் பாகங்கள் உடனுக்குடனே உடலோடு சேர்ந்து கொள்வதுமாய் இருந்தன. பூதமோ கடைசியில் ஆக்ரோஷம் கொண்டு நாகநந்தன் மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது.....
இந்த ஜாமத்துக்குள் உன்னை விழுங்கி விடுகிறேன், பார்!
நாகநந்தன் வெகு சாதுரியமாக கழுகின் மேலேயிருந்தபடி பூதத்தின் மீது பாய்ந்து தலையை ஒரே வெட்டில் வீழ்த்துகிறன்..
ஆ!
நெருங்கி வரும் பூதத்தின் தலையை நாகநந்தன் பற்றிக் கொள்ளுகிறன்
சூரா! உடனே இதைச் சமுத்திரத்தில் கொண்டு போய் எறிந்து விடுவா! அப்புறம் எப்படியோ பார்க்கலாம்...
நில்! வீரனே! அதோ, மணிச் சத்தம் கேட்கிறது. அது முடிவதற்குள் என் தலையை இணைத்துவிடு! இந்த உதவி செய்தால் உன்னை நான் என்றென்றைக்கும் மறக்கமாட்டேன். நான் சொல்வதைக் கேள்!
டண், டண்!
நாகநந்தன் மனமிரங்கி தலையை உடலுடன் வைக்கிறன். பூதம் எழுந்து...
நான் இனி உன் நண்பன். என்னை நினைத்தால் உடனே உன் முன் வருவேன்!
தொடரும்...



நம்பர் ஆட்டம்

என். சந்திரன் (C. 57)

அமைப்பு: இந்த ஆட்டத்தில் எவ்வளவு பேர் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். கலந்துகொள்பவர்கள் இரு பகுதியினராகப் பிரிந்து கொள்ளவேண்டும். உதாரணமாக 19 பேர் இருந்தால் ஒருவன் தலைவன். மீதி 18 பேர்களை 9 பேர்களடங்கிய இரு பிரிவாகப் பிரித்து அவர்களுக்கு ஒரே மாதிரியான நம்பர் கொடுக்க வேண்டும். இரண்டு பகுதியினரும் 6 அடி இடைவெளியில் வரிசையாக நிற்கவேண்டும். இரண்டு பகுதிக்கும் பொதுவாக 15 கஜ தூரத்தில் ஒரு கல்லை வைத்து விடவேண்டும்.

ஆடும் விதம்: இப்போது தலைவன் ஏதாவது ஒரு நம்பரைச் சொல்லுவான். உதாரணமாக 7 என்று சொல்லுவதாக வைத்துக் கொள்வோம். உடனே இரண்டு வரிசையிலுமுள்ள 7 நம்பருள்ள பையன்கள் ஓடிப் போய் எதிரில் வைக்கப்பட்டிருக்கும் பொருளைத் தொட்டு விட்டு, தன்னிடத்திற்கு வந்து விடவேண்டும். யார் முதலில் வந்து வரிசையில் நிற்கிறார்களோ அப்பகுதியினருக்கு 5 பாயிண்ட். எதிர்ப் பிரிவினருக்குப் பாயிண்ட் இல்லை. இப்படியே மீதிப் பேர்களும் ஆட வேண்டும். இதுபோல் மொத்தம் மூன்று முறை ஓடலாம். இரண்டு தடவையிலும் ஒரே கட்சிக்கு அதிகப் பாயிண்டுகள் கிடைத்தால் அதுதான் ஜயித்த கட்சி. முதலில் ஒரு கட்சியும் அடுத்ததில் இன்னொரு கட்சியும் அதிகப் பாயிண்டுகள் எடுத்தால் மொத்தம் மூன்றாவது ஆட்டத்தைச் சேர்த்துக் கணக்கு எடுக்கவேண்டும். இதற்கு நம்பர் ஆட்டம் என்று பெயர். ஆடிப் பார்த்தால் சுவாரஸ்யமாயிருக்கும்.

குறிப்பு: நம்பரைத் தலைவன் கூறியவுடனே ஓடவேண்டும். ஓடும்போதும், பொருளைத் தொட்டுவிட்டுத் திரும்பும்போதும் வரிசையைச் சுற்றிக்கொண்டுதான் வரவேண்டும்.

இயற்கை விநோதங்கள்

வே. ரா. சுந்தரராமன்

1. ஆகாசவாணம் எப்படி மேலே எழும்புகிறது? - வாண வேடிக்கையின்போது ஆகாச வாணம் மேலே எழும்புகிறது. துப்பாக்கிகளிலிருந்தும் பீரங்கி முதலிய வெடி யந்திரங்களி லிருந்தும் குண்டுகள் வெடிக் கின்றன. இதற்கெல்லாம் காரணம் ஒன்றுதான். அதாவது வாயுப்பொருள்களைச் சிறு இடங்களில் அழுத்தி அடைத்து வைத்தால் அவை சதா விரிந்துகொண்டு வேறு இடங்களை நாடிப் பரவுவதற்கே முயலும். ஆகாச வாணம் வெடித்தவுடன் அதனுள்ளிருக்கும் வெடி மருந்துகள் எரிந்து அவ்வாணக் குழாய்க்குள் வாயுப் பொருள்கள் உண்டாகின்றன. குழாயின் வழியே அவை வெளியே வந்து பரவ முயலுகின்றன. வெடிக்கத் தொடங்கியதும் அக்குழாயையே உயரே தூக்கி எறிந்து விடுகிறது.

2. ரேயில் வண்டிகளின சக்கரங்களை அடிக்கடி தட்டிப் பார்ப்பதேன்? - பெரிய பெரிய ஜங்ஷனில் எல்லாம் ஒரு வண்டித்தொடர் வந்து நின்றதும் ஒரு மனிதன் சம்மட்டியை எடுத்துக்கொண்டு வருவான்; ஒவ்வொரு வண்டியிலும் அடியிலுள்ள சக்கரங்களைத் தட்டிப் பார்ப்பான். இதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?

வண்டி செம்மையாய் ஓடி வழியில் விபத்து ஏதும் ஏற்படாமலிருப்பதற்குச் சக்கரங்களும், அச்சுக்களும் விரியாமல் இருப்பது அவசியம். அப்படிப் பழுதாயிருக்கையில் வண்டி ஓடுமானல் அதனல் பல ஆபத்துக்கள் ஏற்படும். அதைத்தான் அவன் கவனிக்கிருன். விரிசலாக இருந்தால் தட்டிப் பார்த்தாலே தெரிந்துவிடும்.



3. ஏன் எண்ணெயும் தண்ணீரும் கலப்பதில்லை? - பாலுடன் தண்ணீரைக் கலக்கிறோம். கலந்தபின் இது பால், இது தண்ணீர் என்று சொல்ல முடியாதபடி அவை கலந்து ஒன்றாகிவிடுகின்றன. ஏன் தெரியுமா? அந்த இரண்டு திரவப் பொருள்களும் ஒன்றாகக் கலக்கக்கூடிய அணுக்களால் ஆனவை என்பதால்தான். எண்ணெயின் அணுக்கள் அவ்வாறில்லை. தண்ணீரின் அணுக்களைவிட மிகப் பெரியவை. ஒவ்வோர் அணுவும் இன்னும் பல சிறு அணுக்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. மிகச் சிறிய தண்ணீர் அணுக்களுடன் கலப்பதைவிட எண்ணெய் அணுக்களுக்குத் தங்களுக்குள்ளேயே ஒன்றாகச் சேர்வது எளிதாய் இருக்கிறது. தண்ணீரையும் எண்ணெயையும் சேர்த்து எவ்வளவு வலுவாகக் குலுக்கினாலும் அவை ஒன்றாகச் சேர்ந்து கலப்பதில்லை.

4. சமுத்திரத்தில் ஏன் ஓயாமல் அலையடித்துக்கொண்டிருக்கிறது? - சமுத்திரத்தில் சதா அலைகள் தோன்றிக்கொண்டிருப்பதற்குக் காற்றுத்தான் காரணம். காற்று எப்போதும் ஓரிடத்திலிருந்து வேறு எங்கோ ஓரிடத்துக்கு வீசிக்கொண்டேதான் இருக்குமே ஒழிய, அமைதி என்பது அதற்குக் கிடையாது. ஆகையால் சமுத்திரமும் ஓயாமல் அலைகள் அடித்துக்கொண்டு அசைந்தபடியே இருக்கிறது. அப்படி ஒருகால் காற்று அசைவற்றிருந்தாலும், அதனால் சமுத்திரத்தில் அலையே ஏற்படாமல் இருந்து விடாது. சூரியன், சந்திரன் இவற்றால் இழுக்கப்படுவதனால் கடல் நீரானது அசைந்துகொண்டேயிருக்கும். அதனால் அலைகளும் எழும்பிக் கொண்டேயிருக்கும். ஆனால் நீர் மட்டத்திலேயேதான் இந்த அசைவெல்லாம் தோன்றுகிறது. தண்ணீர்மட்டத்தின் கீழே, சிறிது அளவுக்கு அப்புறம் கடல் நீரானது கொஞ்சமேனும் அசைவில்லாமலேயே இருக்கிறது.



எங்கள் ஊர்

ஆர். எஸ். ராஜகோபால்

கலைமகளில் மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் போன்ற பெரியவர்கள் எங்கள் ஊர் என்று எழுதியிருக்கிறார்கள். கண்ணனில் சிறுவர்களும் 'எங்கள் ஊர்' என்ற தலைப்பில் எழுதுகிறார்கள். எனக்கும் எங்கள் ஊரைப் பற்றிச் சொல்ல ஆசையாக இருக்காதா? அப்படியும் எங்கள் ஊர் என்ன மட்டமானதா? தேவாரப் பாடல்களில் திருநணா என்று போற்றப்பட்ட புண்ணியஸ்தல மாச்சே! கங்கையும் யமுனையும் கூடும் பிரயாகையைப் போல் காவிரியும் பவானியும் கண்ணுக்குத் தெரியாத அமிருத



வாஹினியும் கூடும் புண்ணிய பூமி எங்கள் ஊர். பவானி என்றும் முக்கூடல் என்றும் பெயர் பெற்றது. இந்தியா மூன்று புறம் நீரால் சூழப்பட்டு வடக்கே மலையை எல்லையாக உடையது போல் எங்கள் ஊரான பவானியும் வடக்கே ஊராட்சிக்கோட்டை மலையும், கிழக்கே காவிரி நதியும் தெற்கே கூடுதுறையும் மேற்கே பவானி நதியும் எல்லையாகக் கொண்ட சிறு தீபகற்பம்.

தென் வடலாக வியாபித்துள்ள பவானியில் தண்ணீர்ப் பஞ்சமே இல்லை. கார்ப்பரேஷன் குழாயில் தண்ணீர் சொட்டுவதும் ஸ்விம்மிங் பூலில் நீஞ்சுவதும் படிப்பதோடு சரி. காவிரி மண்டபத்தின் உச்சியில் எறி, தொப்பென்று தண்ணீரில் குதித்தால் என்ன ஜோராயிருக்கும் தெரியுமா?

சென்னையிலிருந்து நீங்கள் பவானிக்கு வர விரும்பினால் முதலில் புளூமவுண்டன்

எக்ஸ்பிரஸில் ஏறி ஈரோடு வாருங்கள். அங்கிருந்து பிறகு பவானிக்குப் பஸ் ஏறவேண்டியதுதான். பவானி நதிப் பாலத்தில் பஸ் வரும் போதே பெரியகோவில் கோபுரம் தெரியும். அதுதான் வேதாம்பிகை சங்கமேசுவரர் ஆலயம். பஸ் ஸ்டாண்டின் முன்னால் எங்கள் அறிவுக் கோவிலின் பின்புறம் தெரியும். கிழக்கே திரும்பிச் சென்றால் கடைவீதியை அடையலாம். கள்ளிக்கோட்டையிலிருந்து சென்னை செல்லும் டிரங்க் ரோட்டிலேயே, ஊரின் இருதய ஸ்தானத்தில் எங்கள் பள்ளி அமைந்துள்ளது. எங்கள் பள்ளிக்கூடத்திற்கு இப்போது 60 வயசாகிறதாம். முன்னால், பராசக்தி மைதானம். பின்னால் பஸ் ஸ்டாண்டு ஹோட்டல்கள். பாடம் மும்முரமாக நடக்கும் சமயத்தில், 'ஊசிப் பட்டாசு, வெடி டபார், டபார்' என்று ஹோட்டலிலிருந்து பாடும் சத்தம் கேட்கும். பையன்கள் 'டபார் டபார்' என்று தாளம் போடுவார்கள். 'அன்பர்களே, இன்று மாலை' என்று குழாயில் ஒருவன் பொதுக்கூட்டத்துக்கு வரும்படி அழைப்பான்.

எங்கள் ஊர் நெசவுத் தொழிலுக்குப் பேர்போனது. பவானி ஜமுக்காளம் விற்காத இடமே இல்லை. பவானி ஜமுக்காளம் அயல் நாடுகளுக்குக் கூடப் போகிறதாகச் சொல்லுகிறார்கள். முதலாளிகளும் நெசவாளிகளும் பவானியில் உள்ளனர். பெண் பாடசாலை, போஸ்டாபீஸ் முதலியவையும் எங்கள் ஊரில் உள்ளன. கிழக்கே காவிரிப் பாலத்தைத் தாண்டினால் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த குமாரபாளையத்தை அடையலாம். எங்கள் ஊரில் சினிமாவுக்குப் பஞ்சமில்லை. சினிமாவுக்குப் போகிறவர்களும் கொஞ்சமில்லை.

பொது நூல் நிலையம் ஒன்றிருக்கிறது. மாரியம்மன், செல்லாண்டியம்மன் கோவில்களும், சின்னக்கோவில் என்னும் காசிவிசுவநாதர் கோவிலும் உண்டு. மாசி மாதம் மாரியம்மன் தேரும், பங்குனி உத்ஸரத்திற்கு விசுவநாதர் தேரும், ஸ்ரீராம நவமிக்கு ராமர் தேரும், சித்திரை மாதம் சங்கமேசுவரர், ஆதிகேசவப் பெருமாள் தேர்களும் இழுக்கப்படும். அதை ஒட்டி உற்சவங்களும் நடைபெறும்.

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ளது பவானி. துலாஸ்நானம், கிரஹணம் முதலியவற்றிற்குக் குளிக்க யாத்திரிகர்கள் வருவார்கள். ஏதாவது கவலை இருப்பவர்கள் உயிரைப் போக்கிக்கொள்ளக் காயத்திரி மடுவிற்கு வருவார்கள். நீங்களும் வாருங்கள். மடுவில் விழுவதற்காக அல்ல! அதற்கு நான் அழைப்பேனா? கூடுதுறைப் படிக்கட்டில் உட்கார்ந்து காவிரியும் பவானியும் கலப்பதையும் தூரத்தில் தெரியும் மரங்களடர்ந்த தோப்பையும் பார்த்துக் கொண்டிருந்தால் கவலைகள் பறந்துவிடும் என்று பெரியவர்களே சொல்லுவார்கள். பங்குனி மாதம் விசுவநாதர் கோவில் திருவிழா சீக்கிரம் வருகிறது. கண்ணன் நண்பர்கள் அனைவரும் திருவிழாவுக்கு வாருங்கள்.

ஜய் ஹிந்த்

தேன் பறவை

ஆப்பிரிக்காக் காடுகளில் ஒரு வித பறவை இருக்கிறது. யாராவது மனிதர்கள் காட்டின் வழியே நடந்து சென்றால் இந்தப் பறவை அருகில் பறந்து வந்து சிறகை அடித்துக்கொள்ளும்; கொஞ்சம் முன்னால் பறக்கும்; திரும்பியும் அருகில் வந்து சிறகை அடித்துக்கொள்ளும்; அதாவது தன்னை மனிதன் பின் தொடரும்படி செய்யும். நாய் என்னவெல்லாம் உபாயம் செய்து மனிதனைத் தன்னுடன் வரும்படி செய்யுமோ அத்தனையும் இந்தப் பறவையும் செய்யும்.

இந்தப் பறவைக்குத் தேன் என்றால் ரொம்பப் பிரியமாம்; தேன் இருக்கும் மரப் பொந்துகளையும் இது கண்டுபிடித்துவிடுமாம். அதனால் இதற்கு 'ஹனி கைடு' என்ற பெயர் வந்தது. ஆப்பிரிக்க மக்கள் எல்லாம் இந்தப் பறவையின் உதவியாலேயே காடுகளில் தேன் எடுக்கிறார்கள். கிடைத்த தேனில் ஒரு பாகத்தை இந்தப் பறவைக்குக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சிறகை அடித்துக் கொண்டும் கடகடவென்று கத்தியும் தன் கோபத்தைக் காட்டுமாம்.

இந்தப் பறவை குயிலைப் போலவே இருக்குமாம். குயிலைப் போலவே தன் முட்டைகளைக் காகத்தின் கூடுகளில் இடுமாம். அடர்ந்து, இருண்ட மரப் பொந்துகளிலும் அழைத்துச் செல்லுமாம். ஒரு சமயம் சிங்கம், சிறுத்தை முதலிய துஷ்ட மிருகங்கள்கூட இருக்குமாம். ஆகையால் தேன் சேகரிப்பவர்கள் ஜாக்கிரதையாகவே போவார்கள்.

—சம்பா (c. 192)

பெரிய தொகை

ராம. சண்முகம்

தனுஷ்கோடி செல்லும் புகை வண்டி புதுக்கோட்டை ஸ்டேஷனில் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றது. அந்த வண்டியிலிருந்து ரகுபதி முதலியார் கம்பீரமாக இறங்கினுர். அவருக்குப் பின்னே ஒரு கிறிஸ்துவச் சாமியாரும் இறங்கினுர். அப்பொழுது ஒரு சிறுவன் கையில் ஓர் உண்டியல் பெட்டியை வைத்துக்கொண்டு, "ஐயா, சமூக நல நிதிக்குப் பணம் போடுங்கள்" என்று ஒவ்வொருவரிடமும் கேட்டுக் கொண்டு வந்தான். முதலியார் தம் பையிலிருந்த மணி பர்ஸை எடுத்தார். முழு ரூபாய் நாணயம் ஒன்றை எல்லோருக்கும் தெரியும்படியாக உண்டியல் பெட்டியில் போட்டுவிட்டு, பெருமிதத்துடன் அங்கு இருந்தோரை நிமிர்ந்து பார்த்தார்.

அப்பொழுது ஒரு குடியானவன் தன் மடியில் முடிந்து வைத்திருந்த ஒரே காலணுவை எடுத்து உண்டியல் பெட்டியில் போட்டான். முதலியார் அதைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார். "ஏனையா, ரொம்பப் பெரிய தொகை மாதிரி காலணுவைக் கொண்டு போய்ப்போடுகிருயே? இதைப் போடாமலே இருந்திருக்கலாமே!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கிறிஸ்துவச் சாமியார் முதலியாரைப் பார்த்து, "ஐயா, நீங்கள் போட்டது பெரிய

தொகை அல்ல. அந்தக் குடியானவன் போட்டதுதான் பெரிய தொகை" என்றார். "என்ன ஐயா, நான் அந்த ஆளைவிட 64 மடங்கு அதிகமாகப் போட்டிருக்கிறேனே!" என்றார். அப்பொழுது அந்தச் சாமியார் முதலியாரைப் பார்த்து, "அந்தக் குடியானவர் தம் மடியில் முடிந்து வைத்திருந்த பணத்தை அப்படியே கொடுத்துவிட்டார். அதுவே அவருக்குப் பெரிய தொகை. ஆனல் நீர் உம்மிடம் இருக்கும் பணம் முழுவதையுமா கொடுத்து விட்டீர்கள்? இல்லை. மொத்தப் பணத்தில் ஒரு சிறு பகுதியையே போட்டிருக்கிறீர்கள். அப்படியானல் எது பெரிய தொகை என்று யோசனை செய்து பாருங்கள்!" என்றார்.

முதலியார் அவமானத்துடன் தலை குனிந்தார்.

மயிலும் அழகும்

ஒரு காட்டில் குயில் ஒன்று வெகு இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தது. இதைப் பார்த்த மயில் ஒன்றும் பாட முயன்றது. ஆனல் அதன் குரல் அதற்கே மிகவும் பயங்கரமாய் இருந்தது. மற்றப் பறவைகள் இதைக் கண்டு கேலியாகச் சிரித்தன.

"உருவத்தில் மிகச் சிறிய குயில் தன் குரலினல் எல்லோருடைய காதுகளையும் உள்ளத்தையும் சந்தோஷப்படுத்துகிறது. என்னுடைய வாயைத் திறந்தாலோ கேட்பவர்களெல்லாம் சிரிக்கிருர்கள். இது ஏன்?" என்று மயில் வனதேவதையிடம் புகார் செய்தது. அந்த வன தேவதை மயிலுக்கு ஆறுதலாக, "ஆனல் நீ உருவத்திலும் அழகிலும் அதைவிட ஆயிரம் மடங்கு சிறப்புற்றிருக்கிருய். கருத்தைக் கவரும் உன் கழுத்து வர்ணப்பட்டையும் தோகையிலுள்ள கண்ணைப் பறிக்கும் நட்சத்திரப் புள்ளிகளும் எதற்கு ஈடாகும்?" என்று சொன்னுள்.

"இதெல்லாம் இருந்து பயன் என்ன? எனக்கு அழகைவிட இனிய குரல்தான் வேண்டும்" என்றது மயில்.

"ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்றிருக்கிறது. உதாரணமாக உனக்கு அழகு; கழுகுக்குப் பலம்; குயிலுக்குக் குரல்; காகத்துக்குச் சில நற்பழக்கங்கள் முதலியன கடவுளால் விதிப்படி வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அந்தச் சிறப்புக்களுடன் மனத்திருப்தியாக வாழ்கின்றன" என்று வனதேவதை மயிலுக்குப் புத்தி சொல்லிற்று.

—ஈசாப் கதை.

அதிருஷ்டமா?

டி. கே. அபர்ணு

பாண்டிய நாட்டிலே விக்கிரமபுரி என்னும் ஒரு சிறு கிராமம் இருந்தது. அங்கே ஓர் ஏழைக் குடியானவன் இருந்தான். அவனுக்குச் சோமு என்று ஒரு பிள்ளை இருந்தான். அவன் சோம்பேறி. எப்பொழுதும் வேலை செய்யாமல் வீட்டில் இருந்த ஒரு குதிரையின் மேல் ஏறிக் கொண்டு ஊர் சுற்றுவான். இப்படி இருக்கையில், ஒரு நாள் அவன் அந்தக் கிராமத்தின் அருகிலே இருக்கும் ஊருக்குக் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு போனுன். பாதிவழியில் அவனுக்கு மிகவும் களைப்பாய் இருந்ததால் வழியில் இருக்கும் மரத்தின் அடியில் குதிரையைக் கட்டி விட்டு, உறங்க ஆரம்பித்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கண் விழித்தபோது அவன் கட்டியிருந்த குதிரையைக் காணவில்லை; பாவம், எங்கெல்லாமோ தேடி அலைந்துவிட்டு மிகவும் வருத்தத்துடன் வீடு வந்து சேர்ந்தான். இதை அறிந்த கிராமத்து ஜனங்கள் குடியானவனிடம் வந்து, "பாவம்! நீ மிகவும் ஏழை. உனக்கு இருந்த ஒரு குதிரையும் உன் பையனுல் போய் விட்டது. எல்லாம் துரதிருஷ்ட காலம்" என்றூர்கள்.

"என்ன சொன்னீர்கள்; துரதிருஷ்டமா? இல்லவே இல்லை. அதிருஷ்டந்தான்" என்றுன் குடியானவன். இதைக் கேட்ட எல்லோரும் இது ஏதடா இவனுக்கு ஏதோ மூளைக் கோளாறு என்று எண்ணினுர்கள்.

ஒரு வாரம் கழிந்த பிறகு அதே குதிரை ஏழெட்டுக்

காட்டுக் குதிரைகளுடன் வந்து சேர்ந்தது, குடியானவன் வீட்டிற்கு. இதைப் பார்த்த எல்லோரும், "என்ன அதிருஷ்டம்" என்றனர். "எனக்கா அதிருஷ்டம்? இவைகளெல்லாம் துரதிருஷ்டம்" என்றான் அவன். இதைக் கேட்ட எல்லோரும் இவனுக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்கிறது என்றனர்.

மறுநாள் இவனுடைய பிள்ளை சோமு காட்டுக் குதிரைகளில் ஒன்றைப் பழக்க எடுத்துக்கொண்டு போனான். திரும்பி வரும்போது காலை ஒடித்துக்கொண்டு நொண்டியாக வந்து சேர்ந்தான். இதைப் பார்த்த சிலர் குடியானவனிடம் வந்து, "பாவம், உன் பிள்ளையின் கால் உடைந்துவிட்டதாமே! என்ன துரதிருஷ்டம்!" என்றனர்.

"ஏண்டா மடையர்களா! எனக்கா துரதிருஷ்டம்? இந்த விபத்து எனக்கு அதிருஷ்டமே" என்றான். எல்லோரும் இவனை ஒரு மனுஷன் என்று எதுவும் சொல்லக்கூடாது என்று திரும்பிப் போய்விட்டனர்.

கொஞ்ச நாளுக்கெல்லாம் பாண்டிய நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் சண்டை வந்தது. ஆகவே, ஒவ்வொரு வீட்டில் இருக்கும் வாலிபர்களும் சண்டைக்கு வர வேண்டும் என்று அரசன் உத்தரவு இட்டான். ஆனால் கால் உடைந்த குடியானவன் பையனைச் சண்டைக்கு ஆளாக எடுக்கவில்லை. அப்பொழுது குடியானவன் ஊர் ஜனங்களைக் கூப்பிட்டு, "நீங்கள் துரதிருஷ்டம் என்றால் அதிருஷ்டம் என்றும், அதிருஷ்டம் என்றால் துரதிருஷ்டம் என்றும் சொன்னேனே; அப்படி ஏன் சொன்னேன் தெரியுமா? என் பிள்ளைக்குக் கால் உடையாவிட்டால் கட்டாயம் சண்டைக்குப் போயிருக்கவேண்டும். அப்படிப் போயிருந்தால் செத்துத்தான் போயிருப்பான்" என்றான்.

இதைக் கேட்ட எல்லோரும், "இந்தக் கிழவன் மிகவும் சாமர்த்தியசாலிதான், பைத்தியம் இல்லை" என்று மெச்சினார்கள்.

இரு சகோதரர்கள்

'குகப்ரியை'

பூஞ்சோலை அழகிய சிறு கிராமம். நீர்வளம் நிறைந்து எப்பொழுதும் பசுமையாகவே இருக்கும். அந்த ஊரிலே விளையும் பொருள்களுக்கு மதிப்பு அதிகம். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள், 'பூஞ்சோலைச் சம்பா அரிசி, பூஞ்சோலைக் கரும்பு' என்று பெருமையாகப் பேசுவார்கள். அந்தக் கிராமத்திலே வீரமுத்து என்று ஓர் உழவன் இருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் பெயர் கோவிந்தன். இளையவன் பெயர் கோபாலன். அவன் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துத் தன் இரு புதல்வர்களுக்கும் இரண்டு அழகான வீடுகள் கட்டிக் கொடுத்தான். இரண்டு நல்ல வயல்கள், இறைக்கும் கிணறுகளுடன் கூடிய தோப்புகள் இவைகளையெல்லாம் கொடுத்துவிட்டுக் காசி யாத்திரை போனான். பிள்ளைகள் இருவரும் நன்றாக வாழவேணுமென்பதுதான் அவன் ஆசை.

பல வருஷங்கள் சென்றன. மூத்தவன் நாளுக்கு நாள் ஏழையாகி வந்தான். எல்லோரிடமும் கடன் வாங்கினான். ஆனால் இளையவனோ நாளுக்கு நாள் செழிப்பாய், மாடுகளும் கன்றுகளுமாய் வாழ்ந்து வந்தான். நெல் ஏராளமாய் விளைந்தது. வீடு முழுவதும் பரங்கி, பூசணி, அவரை, கொத்தவரை முதலிய காய்களும், கரும்பும் பழவகைகளுமாய் நிறைந்திருந்தன. அவன் மனைவியும் மகளும் அவைகளையெல்லாம் ஒழுங்கு செய்து விற்பனைக்கு அனுப்பக்கூடியவைகளைச் சந்தைக்கு அனுப்புவார்கள். மற்றவைகளை அண்டையிலுள்ளவர்களுக்குக் கொடுத்து, தாமும் வைத்துக்கொள்வார்கள். வீட்டு வாசலில் அழகான கோலங்கள் போட்டிருப்பார்கள்.

கோவிந்தனோ முகத்திலே களையில்லாமல் திண்ணையிலே படுத்திருப்பான். வீதியிலே குப்பையும் கூளமும் குவிந்திருக்கும். காற்று வீசினால் எச்சில் இலைகள் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறம் ஓடிக்கொண் டிருக்கும். வீடு மண் பூசி மெழுகப் படாமல் பாளம் பாளமாய் விரிந்து சொரசொர வென்றிருக்கும். விளைச்சல் போதாது. குழந்தைகள் எல்லோரும் பட்டினி. முணுமுணுத்துக் கொண்டே அவன் மனைவி ஏதோ செய்துகொண்டிருப்பாள்.

இப்படி அண்ணனும் தம்பியும் நேர்மாறாக இருப்பது பலருக்கும் தெரியாது. தகப்பன் போகும் பொழுது இருவருக்கும் சமமாகத் தான் எல்லாம் கொடுத்துப் போனான். இதில் கோவிந்தன் மட்டும் ஏன் இப்படி ஏழைமையினால் கஷ்டப்படுகிறான் என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள். "சரி, இதன் காரணத்தைக் கண்டு பிடித்துத்தான் ஆகவேணும். ஒரே மாதிரியான வசதிகள் இருந்தும் ஒருவன் மேன்மேலும் செழித்து வாழ்கிறான். மற்றவன் குடிக்கக் கூழும் கட்டக் கந்தையும்கூட இல்

லாமல் வாடுகிறான். ஏன்? இதற்குத் தகுந்த காரணம் ஏதாவது இருக்கத்தான் வேண்டும். நான் போய்த் தெரிந்து வருகிறேன்'' என்று கிளம்பினான் ஒரு கிழவன்.

அன்று மழை பெய்திருந்தது. விடியற்காலை நேரம். கிழவன் இவர்கள் வீட்டுக்கு எதிரிலுள்ள மற்றொரு வீட்டின் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். வெள்ளி முளைக்கும் தருணத்தில் உள்ளேயிருந்து கோபாலனுடைய குரல் கேட்டது. எழுந்து மாடுகளுக்குத் தண்ணீர் வைத்தான். இதற்குள் கோழியும் கூவிற்று. அடுத்துள்ள திண்ணைகளிலே படுத்திருந்த வேலைக்காரர்களையெல்லாம் எழுப்பி, "நேரமாகிறது, நேரமாகிறது. பொன் ஏர் பூட்டவேணும். நான் கழனிக்குப் போகிறேன். எல்லோரும் வாருங்கள். எழுந்து வாருங்கள்'' என்று கூப்பிட்டான்.

அவன் குரல் கேட்டதும் சிலர் எழுந்தனர். வேறு சிலர் அவன் வேகமாகப் போய்விடுவான், நாமும் உடன் செல்லவேணும் என்று நினைத்துப் பரபரவென்று ஓடி, காலைக் கடனை முடித்துக்கொண்டு பின் சென்றனர். அவன் தெருத் திண்ணையிலிருந்து இறங்கிய பின் சாணம் தெளிக்கக் கூடாதென்று அவன் எழுந்து சென்ற உடனேயே அவன் மனைவி தெருவுக்குச் சாணம் தெளித்துப் பெருக்கியிருந்தாள். அவள் விடியற்காலையின் மங்கிய வெளிச்சத்திலேயே கோலமிடுவதையும் எதிர்த் திண்ணையிலிருந்தபடியே கிழவன் பார்த்தான்.

அங்கே கோவிந்தன் வீட்டிலே இன்னும் தெருக் கதவு திறந்தபாடில்லை. பொழுதும் விடிந்தது. கோவிந்தன் மெதுவாய்ச் சோம்பல் முறித்துக்கொண்டு வந்து நின்றான். அவன் கண்களிலே தூக்க மயக்கம் தெளியவில்லை. அங்கே நின்றபடியே, "அடே மாரி! முத்து! பொன்னு!'' என்று ஆட்களைக் கூப்பிட்டான். "நீங்கள் எல்லோரும் போய், கழனியை உழுங்கள்! போ, போ! போங்கள் சீக்கிரம்'' என்று அதட்டிவிட்டு, மேல் துணியை இழுத்துப் போர்த்தியவனாய் மறுபடியும் திண்ணையிலே சுருட்டிப் படுத்துக்கொண்டான். அவன் மனை

வியோ மக்களோ எழுந்திருப்ப தாகவே தெரியவில்லை.

சூரியன் மெல்ல உயரே வந்து கொண்டிருந்தான். கோபாலன் மனைவியும் மகளும் குடத்தை எடுத்துக்கொண்டு ஆற்றிலிருந்து குடிதண்ணீர் எடுத்து வரப் புறப் பட்டிருந்தனர். ஆனால் கோவிந்தன் வீட்டு வாசலிலே இன்னும் குப்பை களைக் கூடப் பெருக்கவில்லை. கதவு திறந்தபடி கிடந்தது. திண்ணையிலே குறட்டை விட்டுக் கொண்டிருந்தான் கோவிந்தன்.

சற்று நேரத்திற்கெல்லாம் கோபாலன் மனைவியும் மகளும் ஆற்றிலே குளித்து, கூந்தலை உலர்த்திக்கொண்டு பளபளவென்று தேய்த்த குடங்களிலே தண்ணீரை நிரப்பிக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து வந்துகொண் டிருந்தனர். அவர்களைக் கண்டவுடன் கிழவ னுடைய முகம் மலர்ந்தது.

“ஓகோ! இப்பொழுதுதான் புரி கிறது. எனக்குத் தெரிந்துவிட்டது! தெரிந்துவிட்டது!” என்று கூவி னன் கிழவன். அவர்கள் இவனைக் கவனிக்கவேயில்லை! தங்கள் வேலையிலேயே கருத்தாய்க் குடத்தை எடுத்துக்கொண்டு வீட் டுக்குள் நுழைந்தனர்.

கிழவன் தலையை அசைத்துக் கொண்டே, “இதுதான் ரகசியம். கோபாலன் தான் முன்னே சென்று வேலை செய்பவர்களை யெல்லாம், ‘வாருங்கள்! வாருங் கள்!’ என்று கூப்பிட்டான். உடல் வருந்தி உழைப்பவன், ‘வா! வா!’ என்று கூப்பிட்ட உடனே செல் வத்துக்கு அதிதேவதையான லக்ஷ்மி தேவி அவன் வீட்டிலே வந்து குடி புகுந்துவிட்டாள். இந்த மடையன் கோவிந்தன் சோம்பேறியாய், ‘போ! போ!’ என்று ஆட்களை ஏவி னன். லக்ஷ்மி அவனைப் புறக்கணித் துப் போயே போனாள். ‘போ போ!’ என்பவனிடம் எப்படி வருவாள்? அவள் போய்விட்டாள். இவன் வீடு தேடி மூதேவி வந்துவிட்டாள். சோம்பேறிகளுக்கு இது ஏற்ற தண்டனைதான்!” என்று சொல் லிக்கொண்டே தன் கைத்தடியை எடுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினன்.

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரையில்) **'மூட்டை'**



வாண்டுப் பயல்!

என். எஸ். ஸ்ரீ.

எனக்கு இந்த உலகமே புரிய மாட்டேன் என்கிறது. 'படா படா பெரியவர்களுக்கே புரியவில்லையே. வாண்டுப் பயல் உனக்கு எப்படியடா புரியும்?' என்று கேட்கிறீர்களா? அதனால்தான் பெரியவர்கள், சிறியவர்கள் எல்லாரும்—வயது வித்தியாசம் தவிர—ஒன்று என்பது என்னுடைய கட்சி. என்னைப்போல் அவர்களுக்கும் புரியவில்லை, பாருங்கள்!

ஆனால் பெரியவர்கள் என்னைப் பார்த்து, "அவன் கிடக்கிறான் வாண்டுப் பயல்! அவனுக்கு என்ன தெரியும்?" என்று அலட்சியமாகச் சொல்லி விடுகிறார்கள். அதாவது, 'நான் சிறு பிள்ளை. உலகம் அறியாதவன். எனக்கு ஒன்றும் தெரியாது' என்பது அவர்கள் அபிப்பிராயம்.

ஆனால் இதை ஒப்புக்கொள்ள என் மனம் இடம் தரவில்லை.

நான் சிறுபிள்ளையாக இருக்கலாம். விசாலமான உலகம் தெரியாதவனாக இருக்கலாம். அவர்கள் படித்திருக்கலாம். உலக அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். இல்லையென்று சொல்லவில்லை.

ஆனால் என்னதான் படித்திருக்கட்டும், வயது அதிகம் ஆகியிருக்கட்டும். உலகைச் சுற்றிச் சுற்றி வந்திருக்கட்டும். அநேக விஷயங்களில் சிறுவர்களாகிய எங்கள் போக்கிற்கும் அவர்கள் போக்கிற்கும் கொஞ்சம்கூட வித்தியாசமே இல்லாமல்தானிருக்கிறது — என், பல விஷயங்களில் நாங்களே பரவாயில்லை என்று சொல்லும்படியாகக் கூட இருக்கிறது.

அற்ப விஷயந்தான். கொஞ்சம் சிந்தனைக்கு மட்டும் இடம் கொடுத்துப் பாருங்கள்.

"அம்மா, ஒரு காலணா வேண்டும்!" என்றேன் நான் ஒரு நாள்.

"பொழுது விடிந்தால், பொழுது போனால் அந்தப் பாழும் காலணாப் பல்லவிதானா? எதற்கடா காலணா? பட்டாணி, வேர்க்கடலை வாங்கித் தின்னப் போகிறாயாக்கும்? சாயந்திரம் அப்பா வரும்போது நல்ல பிஸ்கோத்து வாங்கிக்கொண்டு வருவார். சாப்பிடலாம்" என்றாள் அம்மா.

"அதற்கு இல்லை அம்மா!"

"பின் எதற்கடா?"

"பலப்பத்துக்கு அம்மா!"

"அந்தப் பலப்பம் எவ்வளவுதான் வாங்குவாயோ! அதற்கு ஓய்ச்சல் ஒழிவு கிடையாதா? அதோ ஒரு பெருங்காயப் பெட்டி நிறைய, சின்னதும் பெரியதுமாய்ப் போட்டிருக்கிறாய். இன்னும் எதற்கு அந்தப் பாழும் பலப்பம்? எழுதுவதாக இருந்தாலும் பரவாயில்லை. வாங்கிச் சுக்கல் சுக்கலாய் ஒடித்துப் பெட்டியில் வைத்து அழகு பார்ப்பதில் எந்தத் தெய்வத்துக்குத் திருப்தியடா அப்பா! அதெல்லாம் கையில் பைசாக்கூட இல்லை" என்று சொல்லிவிட்டாள்.

அவள் சொல்லியதில் கொஞ்சம் கூடத் தவறு இல்லை. சின்னதும் பெரியதுமாய்ப் பெருங்காயப் பெட்டி நிறையப் பலப்பம் போட்டுத்தான் வைத்திருக்கிறேன்.

இருந்தாலும் கோடி வீட்டுக் கோபு இப்பொழுதுதான் கடையில் புதிதாக வந்திருக்கிறது என்று சொன்னான். பச்சையும் நீலமும் கலந்து அழகு அழகாகக் கோடுகள் போட்ட பலப்பம் ஒன்று வாங்கிக்கொண்டு போனான். அதைப் பார்த்தவுடன் எனக்கும் வாங்க வேண்டுமென்று ஆசையாக இருந்தது. அதனால் அம்மாவைக் கேட்டேன். சில பிள்ளைகள் கேட்காமலே திருட்டுத்தனமாக எடுத்துக்கொண்டு விடுவார்கள். ஆனால் திருட்டுப் புத்தி கூடவே கூடாது என்று அந்த வேலையில் ஈடுபடாமல் அம்மாவைக் கேட்டேன்.

"கடைக்காரர்களுக்கு என்ன வேலை? அப்படித்தான் குழந்தைகளிடம் பணம் பிடுங்குவதற்கு விதம் விதமாக எதையாவது கொண்டு வந்து கொண்டிருப்பார்கள். எழுத வேண்டியதுதானே!" என்பது அம்மாவின் கேள்வி.

கேள்வி என்னவோ நல்ல கேள்விதான்.

சொல்லி வைத்த மாதிரி அப்பொழுதுதான் புடைவைக்காரன் ஒருவன் வந்து சேர்ந்தான். அவனுடன் கூடவே கோடி வீட்டு மாமியும் வந்து சேர்ந்தாள்.

"நான்தான் அனுப்பினேன், மாமி. புது மோஸ்தர் புடைவை. அதுவும் உங்கள் உடம்புக்கு ரொம்ப எடுப்பாக இருக்கும். எங்கள் கனகாவுக்குக்கூட ஒன்று வாங்கியிருக்கிறேன்" என்றாள் கோடி வீட்டு மாமி.

உண்மையிலேயே புடைவை ரொம்பவும் நன்றாக இருந்தது. அம்மா ஒன்று எடுத்து வைத்துவிட்டாள். பணத்துக்கு அவனை ஒரு வாரம் கழித்து வரச் சொல்லியிருந்தாள்.

சாயங்காலம் ஆபீஸிலிருந்து அப்பா வந்தார். அவளுக்குத் தெரிந்த அபிநயங்களையெல்லாம் செய்து புடைவை வாங்கிய விஷ

யத்தை நைஸாக அப்பாவிடம் சொன்னுள் அம்மா.

அப்பாவுக்கு ஒரே கோபம். அந்த மாதத்தில் ஏகப்பட்ட அதிகப்படிச் செலவுகள், பாவம் அவருக்கு!

''இந்தப் புடைவை வாங்குவதில் உனக்கு அலுப்புச் சலிப்பு என்பதே இராதா? எத்தனைதான் வாங்கிப் பெட்டியில் அடுக்கி, மக்க வைத்துக் கறையான்களுக்கும் பூச்சிகளுக்கும் இரையாக்குவாய்? இப்பொழுது கையில் காலணுகூடக் கிடையாது'' என்று சீறி விழுந்தார்.

''நீங்கள் புடைவையைப் பார்க்கவில்லை. புது மோஸ்தர், ரொம்ப நன்ருக இருக்கிறது. இதற்கு எத்தனையோ பேர் போட்டி. அவனிடம் இது ஒன்றுதான் இருந்தது. நமக்குத் தெரிந்தவன் ஆனதால் நமக்குக் கொடுத்து விட்டுப் போனுன்'' என்ருள்.

''அப்படித்தான் புதுப்புது ரகங்களில் வந்து கொண்டிருக்கும். வியாபாரிகளுக்கு என்ன வேலை? பணத்தைப் பறிப்பதற்கு எதையோ செய்துகொண் டிருக்கிருர்கள். அதெல்லாம் கையில் காலணுகூடக் கிடையாது. திருப்பிக் கொடுத்து விடு'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

ஆனல் கடைசியில் அம்மாவின் பிடிவாதம்தான் ஜயித்தது. சகஜந் தானே என்கிறீர்களா? புடைவையை வாங்கிவிட்டாள். வாங்கின அன்று உடுத்துக்கொண்டு, போக வேண்டிய இடத்துக்கெல்லாம் போய் வந்தாள். பிறகு பெட்டியில் மடித்து வைத்துவிட்டாள். அப்புறம் அதை ஏன் எடுக்கிருள்? ஜாடிக்காரிக்குத்தான் அது!

இப்பொழுது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நான் பலப்பம் வாங்கிப் பெட்டியில் போட்டு வைப்பதற்கும், அம்மா புடைவை வாங்கிப் பெட்டியில் மடித்து வைப்பதற்கும் ஏதாவது துளி வித்தியாசம் உண்டா?

ஆனல், 'அவன் வாண்டுப் பயல். அவனுக்கென்ன தெரியும்?' என்கிருள் அம்மா!

எப்படியிருக்கிறது வேடிக்கை!

பட்டுப் பாவாடை

எஸ். வி. ரமணி

குமாருக்கு இரவு தூக்கமே வரவில்லை. படுக்கையில் அப்படியும் இப்படியும் புரண்டவண்ணமாகவே இருந்தான். மன அமைதி இருந்தால்தானே நல்ல நித்திரை வரும்! தன் தங்கை பத்மாவுக்கு ஒரு பட்டுப் பாவாடை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று வெகு நாளாகவே அவனுக்கு ஆசை. ஆசையை நிறைவேற்ற முடியாமல் அவன் நிலை இருந்தது. காலையில் அவன் தங்கை பாவாடைக்காகக் கெஞ்சிய காட்சி அவன் மனத்தை விட்டு அகலவேயில்லை. 'பக்கத்து வீட்டுச் சோமசுந்தரத்தின் மகள் கோகிலம் இன்று பள்ளிக்கூடத்துக்குப் பட்டுப் பாவாடை கட்டிக்கொண்டு போனாள். பள்ளிக்கூடத்திலே ஏதோ கொண்டாட்டமாம்! அவளைப் பார்த்த பத்மாவுக்கும் ஆசை எழுவது சகஜம்தானே! எப்படியாவது வாங்கிக் கொடுக்க வேண்டும்' என்று தீர்மானம் பண்ணிக்கொண்டான். ஆனால் எப்படி வாங்குவது என்றுதான் அவனுக்குப் புரியவில்லை.

இரவு வெகுநேரம் வரைக்கும் யோசனை செய்து பார்த்தான். ஒரு வழியும் தோன்றவில்லை. கடைசியாகத் தான் வேலை பார்த்து வந்த கடையில் அட்வான்ஸாக இருபது ரூபாய் வாங்குவதுதான் சாத்தியமான காரியம் என்று தோன்றிற்று. 'இதுதானே முதல் தடவை அட்வான்ஸ் கேட்கிறோம். கொடுக்க மாட்டாரா என்ன? நிச்சயம் கிடைக்கும்' என்று உறுதிப்படுத்திக்கொண்டான் குமார்.

சோமசுந்தரத்தின் ஜவுளிக் கடையில்தான் குமார் வேலை பார்த்து வந்தான். அவன் வேலையில் அமர்ந்ததிலிருந்து அவனுக்கு வயது என்னவோ ஏறுகிறதேயன்றி அவன் சம்பளம் இருபது ரூபாய்க்கு மேல் கொஞ்சங்கூட ஏறவில்லை. அந்தப் பணத்தில்தான் அவன் வீட்டிலுள்ள மூன்று ஜீவன்களும் வயிறு வளர்க்கவேண்டும்.

தகப்பனார் இறந்தவுடன் குமார் குடும்பப் பொறுப்பை ஏற்று, பள்ளிப் படிப்பை விட்டுவிட்டு ஜவுளிக் கடையில் வேலைக்கு அமர்ந்தான். பத்மாவுக்கும் பத்து வயது ஆயிற்று. அவள் சுத்த வெகுளி. அவள் முகம் வாடாமல் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதே அவன் ஆசை. அவன் வாங்கும் சம்பளத்தில் எப்படித் தன் தங்கையின் ஆசையை நிறைவேற்ற முடியும்?

இரவு முழுவதும் பக்கத்து வீட்டுக் கோகிலமும் அவன் தங்கை பத்மாவும் அடிக்கடி மாறி மாறி அவன் மனத் திரையில் தோன்றிக் கொண்டேயிருந்தார்கள்.

வழக்கம்போல் கடைக்குக் காலை எட்டு மணிக்குப் போனான். முதலாளி சாவகாசமாக உட்கார்ந்திருக்கிறாரா என்று பார்த்துக்கொண்டே இருந்தான். வியாபாரத்திலேயே கவனம் செல்லவில்லை. எப்பொழுதும் சோமசுந்தரம் கடிதங்களை எல்

லாம் பார்த்துப் பதில் எழுதிவிட்டுத் தான் வெளியே வந்து பெட்டியடியில் உட்காருவார்.

அந்தச் சமயம் பார்த்துக் குமார் உள்ளே நுழைந்தான்.

"என்னப்பா, என்ன சமாசாரம்?" என்றார்.

"ஸார், ஒரு முக்கியமான காரியம். அவசரம்" என்று இழுத்துக் கொண்டே போனான்.

"விஷயத்தைச் சொல்லாமல் என்னப்பா பேசிண்டே போறே? சீக்கிரம் சொல்லு" என்றார் அவர்.

"இருபது ரூபாய் வேணும் ஸார், முக்கியமா!"

"என்ன இருபது ரூபாயா? எதுக்கு?"

"வீட்டிலே ரொம்பத் தேவையாயிருக்கு ஸார். அம்மாதான் உங்களைக் கேக்கச் சொன்னா" என்றான் குமார் பயத்துடன்.

கொஞ்சநேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தார் சோமசுந்தரம். பிறகு, "அதெல்லாம் இப்போ கொடுக்க முடியாது. நீ வேலையைப் பாரு" என்று சொல்லிக்கொண்டே எழுந்து வெளியே வந்துவிட்டார்.

'என்னடா இது, ஐந்து வருஷங்களாக இந்தக் கடையில் வேலை செய்கிறோம். இருபது ரூபாய் சமயத்

தில் கொடுக்க மறுக்கிறாரே' என்று நினைக்க நினைக்கக் குமாருக்குக் கோபம் தாங்க முடியவில்லை. மனத்தில் ஆத்திரம் அலைமோத வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தான்.

மணி பன்னிரண்டு இருக்கும். "ஏய், முருகேசா! கடையைப் பார்த்துக்கோ. நான் கொஞ்சம் வீடு வரைக்கும் போயிட்டு வந்துடறேன்" என்று சொல்லிவிட்டு முதலாளி வீட்டுக்குக் கிளம்பிவிட்டார். முருகேசன் அவர் கடையில் குமாருடன் வேலை செய்பவன். ரொம்பவும் நம்பிக்கையானவன். அவர் இல்லாத சமயங்களில் முருகேசனே வியாபாரத்தைத் திறமையாகக் கவனித்துக்கொள்வான்.

நல்ல வெயில் நேரம். கடையில் ஆளே கிடையாது. அந்தச் சமயத்தில் ஒரு பெரிய மனிதர் பத்து வயதுள்ள சிறுமியைக் கடைக்கு அழைத்துக்கொண்டு வந்தார். "இந்தாப்பா, இந்தக் குழந்தைக்குப் பாவாடை தைக்கணும். நல்ல பட்டுத் துணியா எடு பார்க்கலாம்" என்றார் பெரியவர். குமார்தான் ஏழெட்டுக் கலர்களில் எடுத்துப் பிரித்துக் காட்டினான். அந்தப் பெண் ஒரு கலரும் தனக்குப் பிடிக்கவில்லை என்று மறுத்துக்கொண்டே வந்தாள். கடைசியாக ஒரு கிளிப் பச்சைத் துணியை எடுத்துப் போட்டான். ஜிலு ஜிலு என்று கண்ணைப் பறித்தது கலர். அதைப் பார்த்ததுமே சந்தோஷத்துடன், "இதுதானப்பா வேண்டும்" என்றாள் அந்தப் பெண். பெரியவர் அதில் மூன்று கஜத்தைக் கிழித்து எடுத்துக்கொண்டு வெளியில் சென்றுவிட்டார்.

குமாருக்கு வேலையிலேயே மனம் ஓடவில்லை. அவன் தங்கையைப் போலவே இருந்தாள் இந்தப் பெண்ணும். இந்தப் பெண்ணைப் போலத் தானே பத்மாவுக்கும் ஆசை இருக்கும்? விலை பதினெட்டு ரூபாய்! எங்கே போவது பணத்துக்கு என்று ஏங்கியது அவன் உள்ளம். 'அந்தக் குழந்தைக்கு அவள் தகப்பனார் கேட்டவுடன் வாங்கிக் கொடுக்கவில்லையா? நீயும் வாங்கிக்கொடு. எப்படியாவது வாங்கிக் கொடு. முடியாவிட்டால் திருடியாவது ...... வாங்கிக்கொடு' என்று அவன் மனசு அடித்துக் கூறியது.

'திருடியாவதா? சே, கூடவே கூடாது!' என்று நினைத்தான் மறு கணம். மனத்தில் பெரும் போராட்டம்; கலக்கம்.

"ஏய், குமார்! கடையைப் பாத்துக்கோ - இந்த வெயிலிலே யாரும் வரமாட்டாங்க; நான் இதோ சாப்பிட்டுட்டு வந்துடறேன்" என்று முருகேசன் தன் டிபன் பாக்ஸை எடுத்துக்கொண்டு உள்ளே போய்விட்டான்.

சாப்பிட வந்தவர்: என்ன, ஐஸ் கிரீம் நேத்துப் பண்ணினது மாதிரி 'ஜில்'லுன்னு இருக்கு. இன்னிக்குப் போட்டதாக் கொண்டு வாப்பா! —ஐமால்.

கடையில் குமார் மட்டுந்தான். அவன் மனச்சாட்சிதான் வெற்றி யடைந்தது. கடைக்கு வெளியில் போய்ப் பார்த்தான். எப்படியும் முருகேசன் திரும்பிவர அரை மணியாவது பிடிக்கும். அதற்குள் அந்தக் கிளிப் பச்சைத் துணியில் மூன்று கஜம் திருடிவிட முடிவு செய்தான். தன் காலி டிபன்பாக்ஸைப் பக்கத்தில் எடுத்து வைத்துக்கொண்டான். மிரள மிரள அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே பீரோவைத் திறந்தான். கைகால்கள் நடுங்கின. துணியைக் கையில் எடுத்து அவசர அவசரமாக அளந்து கிழித்தான். முதலில் கிழித்த துணியைத் தன் டிபன் பாக்ஸுக்குள் போட்டு மூடினான். மீதித் துணியை மறுபடியும் பீரோவுக்குள் வைத்தான். பயத்தால் உடல் முழுவதுமே ஆடியது. மயக்கமே வந்துவிடும் போல் இருந்தது. உடலெல்லாம் வேர்த்துக் கொட்டியது. சமாளித்துக்கொண்டு பீரோவைப் பூட்டிச் சாவியை ஆணியில் மாட்டினான். திருடனைப் போல் பதுங்கிக்கொண்டே டிபன் பாக்ஸை வழக்கமான இடத்தில் வைத்துவிட்டு வந்தான். பிறகுதான் 'அப்பாடா' என்று மூச்சு விட்டான்.

'எப்பொழுது மணி எட்டு ஆகும்?' என்று கடிகாரத்தைப் பார்த்த வண்ணமாகவே இருந்தான். முதலாளி முகத்தைப் பார்க்கவே பயமாயிருந்தது குமாருக்கு.

மணி எட்டு. குமாரை எப்பொழுதும் இரவு மட்டும் கோகிலத்தின் தந்தை தம்முடன் வண்டியில் அழைத்துப் போவது வழக்கம். இன்று குமார், "ஸார், கொஞ்சம் கடைத் தெருவிலே வேலை இருக்கு; பார்த்துக்கொண்டு நான் வர்றேன் - ஸார்!" என்றான்.

"தனியாகவா? சரி, ஜாக்கிரதையாக வந்து சேரு" என்று சொன்னார் அவர்.

குமார் கையில் டிபன் பாக்ஸை எடுத்துக்கொண்டான். குஷி தாங்க முடியவில்லை. வீட்டில் கேட்டால் பணத்துக்காக அலைந்து துணி வாங்கினதாகச் சொல்ல எண்ணிக் கடைத் தெருவில் சுற்றினான்.

இரவு மணி பதினொன்று இருக்கும், குமார் வீட்டுக்கு வரும்பொழுது, அவனைக் கண்டதும் பத்மா, "அண்ணா!" என்று கூவினாள். "அண்ணா! இதோ பார்! பட்டுத் துணி. கோகிலத்து அப்பா கொடுத்தனுப்பினார், அண்ணா! எவ்வளவு நன்றாயிருக்கு பார்த்தாயா? நாளைக்கே இதை எனக்குத்

தைச்சுக் கொடு அண்ணு!" என்று ஓடி வந்து கையில் வைத்திருந்த துணியைக் குமாரிடம் கொடுத்தாள்.

குமார் அந்தத் துணியைப் பார்த்தான். அதே கிளிப் பச்சை! இவன் கிழித்த துணிமாதிரியேதான் கலர்! குமாருக்குத் தலை சுற்ற ஆரம்பித்தது.

குமாரின் தாயாருக்கு ஒன்றுமே புரியவில்லை. "ஏய் குமார், ஏண்டா? அப்படியே உட்கார்ந்துட்டே? என்ன சமாசாரம்?" என்று பிள்ளையின் அருகில் உட்கார்ந்து கொண்டாள். பிறகு, "குமார், நீ இன்னிக்குக் கோகிலத்து அப்பாவைப் பணம் கேட்டாயாமே? எதுக்குக் கேட்டாய்? பத்மாவுக்குத் துணி வாங்கவா? அவர் என்னைக் கூப்பிட்டு மத்தியானம் கேட்டார். ஒரு சமயம் நீ துணி வாங்கத்தான் கேட்டிருப்பேன்னு தெரியும். 'அவன் தங்கை ஏதோ பட்டுப் பாவாடை வேணும்னு சொன்னுள். அதுக்காகக் கேட்டிருப்பான். அவன் சிறிசு. கடன் தேவையில்லை' என்று சொல்லிவிட்டேன்—ஆனுல் கொஞ்ச நேரத்துக்கு முந்தி, கோகிலம் இந்தத் துணியையும் இரண்டு ரூபாய் நோட்டையும் அவள் அப்பா கொடுக்கச் சொன்னதாகக் கொண்டு வந்து கொடுத்தாள். நீ அவரைத் துணி வேணும்னு கேட்டயா?" என்று கேட்டாள்.

குமாருக்குச் சம்மட்டி கொண்டு அடித்தாற்போலிருந்தது. விஷயத்தைத் தெரிந்துகொண்டதும், "அம்மா" என்று கதறினன். 'திருடு' என்று சொன்ன மனச்சாட்சியே இப்பொழுது திருடியதற்காக அவனைப் பெரிதும் வருத்தியது. "இதோ வரேம்மா" என்று டிபன் பாக்ஸுடன் வாசலில் தலை தெறிக்க ஓடினன்.

'பட் பட்' என்று சோமசுந்தரத்தின் வீட்டு வாசற் கதவைத் தட்டினன். வாசல் பக்கத்து அறையில் இருந்த கோகிலத்தின் தந்தையே கதவைத் திறந்தார். வாசற்படியிலேயே அவர் காலில் விழுந்தான் குமார். அவன் உடலெல்லாம் நடுங்கியது. கண்களில் ஜலம் தளும்பியது. "ஸார்..என்னை மன்னிச்...சுடணும் சார்..தெரியாமே தி...ரு..டி...ட்டேன்..ஸார்" என்று நாக் குழறக் கதறினன்.

"என்ன அது?" என்று கேட்டார் சோமசுந்தரம்.

"இதோ...துணி..." என்று சொல்லிக்கொண்டே டிபன் பாக்ஸைத் திறந்தான் குமார். ஆனுல், டிபன் பாக்ஸில் ஒன்றுமே இல்லை; காலியாக இருந்தது!

"அதை நான் உனக்குத் தெரியாமல் திருடி விட்டேன், போ!" என்று சொல்லிச் சிரித்தார் சோமசுந்தரம்.

"ஸார், நான் அசட்டுத்தனமாகத் திருடிவிட்டேன், ஸார். இதற்கு என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன், ஸார்! என்று நாத் தழுதழுக்கக் கூறினன் குமார்.

சோமசுந்தரம் அன்பும் ஆதரவும் பொங்க அவன் தலையைத் தடவிக்கொண்டே, "குமார், செய்த தப்பை நீ உணர்ந்துவிட்டாய். அதுவே போதும். இனிமேல் இதைப்போல் நீ செய்யவே மாட்டாய். எனக்குத் தெரியும். போய்ப் படுத்துக்கொள். நாழிகையாகிவிட்டது" என்று குமாரை உற்சாகப்படுத்தி அனுப்பினர்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(S) 415. சீதாராமன், S., கடையநல்லூர். 416. சண்முகம், மணி, A., வீரவநல்லூர். 417. ஸ்ரீதரன், பிரேமா, கோபாலன், T.G., சென்னை-5. 418. சண்முகநாதன், S.K., மணிப்பாய். 419. செல்வராஜ், புதுக்கோட்டை. 420. சாந்தாமணி, K., திரிகோணமலை. 421. சங்கரன், S., தோலங்கோமா. 422. சங்கரன், S., மேலூர். 423. சுப்பிரமணியன், M, கிண்டி. 424. சுப்பிரமணியன், C. V., நாகப்பட்டினம். 425. சுகுணு, ராமசந்திரன், ஹேமலதா, N., புதுடில்லி. 426. சல்தான், A.M., திருக்களாச்சேரி. 427. சங்கராமன், K.N., மண்டபம் காம்ப். 428. சீனிவாசன், குமார், D., புதுடில்லி. 429. சிவகாமி, S.G., சென்னை-4. 430. சௌந்தரராஜன், V., சென்னை-4. 431. சூரியநாராயணன், P.R., சென்னை-17. 432. சுதந்திரகாந்தன், D.P., நாகப்பட்டினம். 433. சண்முகம், M., கவுந்தப்பாடி. 434. ஸ்டான்லி, A., தஞ்சாவூர். 435. சிவலிங்கம், S. E., டிக்கோயா. 436. சீனிவாசன், R., மதுராந்தகம். 437. சரவணகுமார், S., முசிறி. 438. சர்வேசுவர சர்மா, நல்லூர். 439. சுப்பிரமணியன், P.V., வில்லிவாக்கம். 440. சுப்பிரமணியன், K.V., பம்பாய். 441. சரவணமுத்து, K., காரைநகர். 442. சுப்பிரமணியன், M., திருவானைக்காவல். 443. சங்கரநாராயணன், V.R., கோயில்பட்டி. 444. சம்பத்குமார், K. N., சென்னை-1. 445. செல்வரங்கன், P., சென்னை-4. 446. சீனிவாசன், கோவிந்தராஜன், T., கோயம்புத்தூர். 447. சந்தியாகு, M., இரக்குவானு, சிலோன். 448. சுப்பிரமணியன், S,P.M., கொழும்பு-11. 449. சிற்சபேசன், P. S., தேவகோட்டை. 450. செந்தில்நாயகம், N., உடுமலைப்பேட்டை. 451. சேதுராமன், K., சென்னை-4. 452. சண்முகம், K. R., மேட்டுப்பாளையம். 453. சாரங்கபாணி, A., விழுப்புரம். 454. சாந்தா, B., சென்னை-10. 455. ஸ்ரீதர், K., (விலாசம் எழுதவில்லை) 456.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

ஏப்ரல் '52 கூபன் நெ:

சகுந்தலாபாய், R. C., திண்டிவனம். 457. சேதுராமன், ராம., புஸல்லாவா. 458. சாந்தா, சீதாராம், K.R., கரும்பூர், 459. சோலையப்பன், சிதம்பரம், வள்ளிமணி, பள்ளத்தூர். 460. சேஷம்மாள், கண்ணுடிப்புத்தூர். 461. சாமிநாதன், T. K., திருவிடைமருதூர். 462. சண்முகத்தாயி, சாத்தூர். 463. சேது, G., மருதாண்டக்குறிச்சி. 464. சீனிவாசன், ரகு, N., திருப்பூர். 465. சீனிவாசன், R., மதுரை. 466. சீனிவாசன், மோகன், சென்னகேசவன், ஆனைக்குட்டம். 467. சிங்காரம், N., கொழும்பு-7. 468. சீனிவாசன், R., ஆண்டிப்பட்டி. 469. சீனிவாசன், K., காணுடுகாத்தான். 470. சீனிவாசன், N., கீழக்கரை. 471. சீனிவாசன், விஜயலக்ஷ்மி, சுவர்ணலதா R., புது டில்லி. 472. சீனிவாசன், K., சேலம். 473. சீனிவாசன், K. R., கடத்தூர். 474. சீனிவாசன், R., கல்கத்தா-26. 475. சீனிவாசன், T. N., கோயம்புத்தூர். 476. சீனிவாசன், D., பெரிய காஞ்சிவரம். 477. சீனிவாசன், N., ஆனந்தகிருஷ்ணபுரம். 478. சுவாமிநாதன், R., 5. புதூர். 479. சுவாமிநாதன், M., வலங்கைமான். 480. சுவாமிநாதன் M., பண்ருட்டி. 481. சேனுபதி, சரஸ்வதி, V., கீழக்கரை. 482. சுப்பிரமணியம், N., திருவிடைமருதூர். 483. சுப்பிரமணியம், R., ஹாட்டன். 484. சுப்பிரமணியம், ரமணி, ஹேமா, புதுடில்லி. 485. சுப்பிரமணியன், A., புதுச்சேரி. 486. சுப்பிரமணியன், G. P., கோபிசெட்டிப்பாளையம். 487. சுப்பிரமணியன், சுந்தரம், S., ஸ்ரீவைகுண்டம். 488. சியாமளா, P. S., காரக்பூர். 489. ஷண்முகசுந்தரம், சுப்பிரமணியன், C.. வெளிப்பாளையம். 490. சீனிவாசன், ராஜா. N., கோயம்புத்தூர் 492. சரோஜா, R., கோயம்புத்தூர். 493. சத்தியவிசுவேசுவரன், E., வெல்லவத்தை. 494. சித்தி அனிஸா, S., மாவநெல்லை. 495. சாரங்கராஜன், S., கரூர். 496. சரோஜினி, பிரேமா, P., திருவண்ணுமலை. 497. சர்தார் கமால்பாஷா, S. S., திண்டுக்கல். 498. சரோஜா, சகுந்தலா, ஜயலக்ஷ்மி, R., சோழவந்தான். 499. சீனிவாசன், R.A., பண்டாரவாடை. 500. சுபத்ரா, கிருஷ்ணவேணி, சீதாராமன், P. S., கல்லுக்குழி. 501. சுந்தரம், S. M., சென்னை-4. 502. சங்கரநாராயணன், R., கல்லிடைக்குறிச்சி.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

மாதந்தோறும்
இங்கிலீஷ் 1 - ஆம் தேதி
வெளிவரும்.

புதிதாகச் சேருபவர்கள் 1952-ஆம் வருஷக் கூபன்களைத் தான் அனுப்பவேண்டும்.
1951-ஆம் வருஷக் கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

ஹாஸ்ய நாடகம்

சந்நியாசமா, சம்சாரமா?

எஸ். ரங்கநாயகி

[அம்புலு-12 வயது; விச்சு-10 வயது; பாச்சு-8 வயது; சீனு-5 வயது: ராமநாதன் குழந்தைகள். சரசு - ராமநாதன் மனைவி. மாப்பிள்ளை - முதல் மாப்பிள்ளை. காலம் - சனிக்கிழமை, காலை.]

தகப்பனார்: அடேய் விச்சு!

விச்சு: (மௌனம்)

தகப்பனார்: ஏலே விச்சு, கூப்பிட்டா என்னு கேட்கக்கூடாது? ஏண்டா சனியனே!

விச்சு: அம்மா சொன்னதைக் கேட்பதா, அப்பா சொன்னதற்குப் பதில் சொல்வதா என்று புரியவில்லை.

தக: கூப்பிட்டதற்குப் பதில் சொல்லாமெ என்னென்னமோ உளறுகிறாயே!

விச்: வந்து......வந்து...... இல்லேப்பா, அம்மா இப்பதான் வாயைத் திறந்தா உதைச்சுடுவேன் என்றாள். உடனேயே நீ வந்து ஏண்டா பதில் சொல்லவில்லை என்கிறாய். இதனாலே, தாய் சொல் மிக்க மந்திரமில்லையா, தந்தை சொல் மிக்க மந்திரமில்லையா என்று புரியவில்லை.

சரசு: அட சட், வாயை மூடு. அப்பா கூப்பிட்டால் பதில் சொல்லக் கூடாது என்று எப்படா சொன்னேன்? நான் எதக்காகடா வாயைத் திறக்காமலிரு என்று சொன்னேன்?

பாச்: எனக்குத் தெரியும் அம்மா, நான் சொல்றேன். அவன் உன்னிடம் எதிர்த்து வாயாடினான்.

விச்: எய் பாச்சைப் பயலே, உன்னை யாரடா கேட்டது? நீ வாயாடுவதே கிடையாதோ? என்னைச் சொல்ல வந்துவிட்டான். எழுந்து வந்தேன்னா பாச்சை சுவர் மூலையில் ஒளியாதா?

பாச்: யாருடா மூலைக்குப் போவா? ஒரு குத்து விட்டேன்னா விச்சுப் பயல் விசுபலகையில் படுத்து விசும்பமாட்டானா?

தக: சரி சரி, போதும் மூடுங்கள், வாயை! எய் விச்சு, ஏ பாச்சு, ஏ அம்புலு! என் மணி பர்ஸ் எங்கே?

அம்: அது குப்பைத் தொட்டியில் இருக்கும், அப்பா!

தக: என்னது?

அம்: அதாம்பா, இன்னிக்குத் தேதி 20 ஆகிவிட்டதே. மணியான இடமான கோட்டுப் பாக்கெட்டை விட்டு உங்கள் டிராயர் குப்பைத்

தொட்டிக்குப் பறந்து போயி ருக்கும்!

தக: சட், வாயைப் பார்...

பாச்: கழுதை வாயைப்போல்!

அம்: ஏய், சும்மா வாயை மூட முடியவில்லையோ?

தக: ஏ சரஸு, என் மணிபர்ஸ் எங்கேடி?

சர: நான் எங்கே கண்டேன்?

அம்: பொய் அப்பா! அம்மாதான் அதைக் கண்டுபிடித்தாள்.

சர: என்னடி உளறுகிறாய்?

அம்: நானா உளறுகிறேன்? பால்காரன் வந்து சேற்று வாச வில் சத்தம் போட்ட பொழுது, ஓர் இடம் பாக்கியில்லாமல் எல்லோரும் அலசி அலசி மணி பர்ஸைத் தேடி னோமே! கடைசியில் அது யார் கையில் கிடைத்தது, நினைவிருக் கிறதா?

பாச்: அதை யார் பிரித்தது, நினைவிருக்கிறதா?

விச்: அதிலிருந்த பணத்தை எடுத்துப் பால்காரனிடம் யார் கொடுத்தது, நினைவிருக்கிறதா?

அம்: பிறகு அதை அலட்சியம் செய்து, டிராயர் குப்பைத் தொட்டி யில் யார் போட்டது நினைவிருக் கிறதா?

தக: அடி பாதகி, என்னைக் கேட் காமல் அந்தப் பணத்தைப் பால் காரனிடம் கொடுத்துவிட்டாயா?

அம்: அதைப் பால்காரனிடம் கொடுக்காதே என்று நான்கூடச் சொன்னேன், அப்பா.

சர: அவன் பாக்கிப் பணத்தை அவனுக்குக் கொடுக்க வேண் டாமா? அவன் வாசலில் வந்து சத்தம் போட்டால் மானம் போகிறதே?

பாச்: இவன் மானத்திற்குப் பயப்படுகிறாயே. இங்கிலீஷ் நோட்டு, தமிழ்ப் புத்தகம் இல்லா மல் வாத்தியாரிடம் அடி வாங்கி வாங்கி என் மானம் போகிறதே, அதற்கு வழியில்லையா?

அம்: பாட்டு வாத்தியாருக்குச் சம் பளம் கொடுக்காமல், அவர் கழுதை போல் கத்த ஆரம்பிக்க, அண்டை அயலில், 'யாரடி உங்காத்தில் தினம் ஓலமிடுகிறார்?' என்று கேட்கும் போது என் மானம் போகிறதே, அதற்கு வழியில்லையா?

விச்: நல்ல சட்டை, நிக்கர் இல் லாமல் ஸ்கூலுக்குப் போகும் போதெல்லாம் பையன்கள் என் னைப் போஸ்டாபீஸாகக் கருத, என் மானம் போகிறதே, அதற்கு வழி யில்லையா?

தக: ஏய் சனியன்களா, வாயை மூடப்போகிறீர்களா, இல்லையா? அந்தப் பணத்தை ஒரு கடன்கார னுக்குக் கொடுப்பதற்காக வேறு ஒரு வனிடம் கடன் வாங்கி வைத்திருந் தேன். அதை அலசிக் கண்டுபிடித் துத் தீர்த்தாகிவிட்டது. இந்த ஒரு வருஷமா அவனுக்கு ஜவாப் சொல்லி வந்துவிட்டேன். இனி மேலும் அவன் முகத்தில் எப்படி முழிப்பது? சீச்சீ, மானம் போகி றது. எங்கேயாவது ஓடிப் போய் விடலாமென்று தோன்றுகிறது!

சர: இதோ பாருங்கோ, ஓடுவதற்கு முன்னாடி சாயங்காலம் வரப்போகும் மளிகைக் கடைக்காரனுக்கு வழி சொல்லிவிட்டுப் போங்கோ!

அம்: ஏன், வீட்டுக்காரரை மறந்துவிட்டாயோ? அவர் தான் ஸ்கூலுக்குப் போகும் போதெல்லாம், 'அப்பா இருக்கிறாரா?' என்கிறார். "இல்லை, அப்பா 'காம்'பில் இருக்கிறார்" என்று சொல்லிவருகிறேன். இன்னும் எவ்வளவு நாட்கள் தான் உங்களைக் 'காம்'பில் போட்டு வைக்கமுடியும் அப்பா?

பாச்: ஏன், இதைத் தவிர, தயிர்க்காரி, கறிகாய்க்காரி, வண்ணான் இவர்களை மறந்துவிட்டாயோ? கடனில் வாங்கும் புளிச்ச தயிரும், அழுகல் கறிகாயும் சாப்பிட்டுச் சாப்பிட்டு வயிற்று எரிச்சலைத் தணிக்க, வண்ணான் வெளுத்த அழுக்குச் சட்டையைப் போட்டுக்கொண்டு ஓடினால் எல்லோரும் பரிகாசம் செய்கிறார்கள்.

தக: ராமா, ராமா! எப்பத்தான் இந்தத் தொல்லை ஒழியுமோ?

சர: இந்த வேளைக்குக் காபிக் கொட்டை வாங்கி வந்துவிட்டால் என் தொல்லை ஒழியும்.

அம்: எனக்கு ஒரு பேனா வாங்கி விட்டால் என் தொல்லையும்...

பாச்: எனக்கு ஓர் காம்பஸ் பெட்டி வாங்கிவிட்டால் என் தொல்லையும்...

விச்: னெக்கு ஒரு இங்கிலீஷ் புத்தகம் வாங்கிவிட்டால் என் தொல்லையும்...

தக:...ஒழிந்து என்னையும் ஒழித்து விடலாம். என் சிநேகிதன் ராமசாமி கெட்டிக்காரன். கல்யாணமே செய்துகொள்ளாமல் ஒரு கஷ்டமுமில்லாமல் இருக்கிறான். அதுபோல் நானும் இருந்திருக்க வேண்டும்.

சர: அதுதான் உங்களால் முடியாது. நீங்கள் குளிக்கப் போகும் பொழுது உங்கள் துணிகளைத் தேடித் தரவும், சாப்பாட்டு டயத்தில் பேப்பரை மூடிவிட்டு வர உங்களைக் கூப்பிடவும் ஒரு அகமுடையாள் வேண்டுமே!

அம்: அது மட்டுமா? தொலைந்த சாமான்களைத் தேடித் தர ஒரு பெண் வேண்டுமே!

பாச்: டிராம்பாஸ், குடை இவைகளைத் தேடித் தர ஒரு சிறிய பிள்ளை வேண்டுமே!

விச்: அதோடு, வீட்டில் காபி வேண்டாம் என்று ஜம்பமாகச் சொல்லிவிட்டு, ஹோட்டலுக்கு 'வாக்கிங்' போவதை மறைத்து வைக்க ஒரு பிள்ளை வேண்டுமே!

தக: ஏய், தடி ராஸ்கல்களா, சனியன்களா, பீடைகளா, மூதேவிகளா, வாயை மூடி...

விச்: இருங்கள், நிறுத்தி விடாதீர்கள். இன்னும் ஒன்றை விட்டு விட்டீர்கள். 'பேய் - பிசாசுகளா' என்பதையும் சொல்லிவிட்டு...

தக: (கோபத்துடன்) அட சட், வாயை மூடு. உங்களை வைத்துக் கொண்டு காலம் தள்ளுவதைவிட எங்கேயாவது சந்நியாசம் போய் விடப் போகிறேன்!

சீனு: நானும் வரேம்பா!

தக: எங்கேடா?

சீனு: சந்நியாசத்துக்கு!

(தகப்பனாரைத் தவிர மற்ற எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

அம்: அட அசடே, சந்நியாசம் என்றால் ஒரு படம் இல்லையடா. அப்பா ரிஷியாகப் போய்விடப் போகிறாராம்!

சீனு: அப்படியானா, மீசை தாடியெல்லாம் இருக்குமா? ஏ, அப்பாடியோ, நான் கிட்டவே வரமாட்டேன்! அப்பா, நீ பொய் மீசை, தாடி வச்சுக்கோ. நான் கிட்ட வரப்போ அதை எடுத்துடலாம். இல்லாட்டா, அதை வச்சுண்டு அம்பு, பாச்சு, விச்சு எல்லோரையும் பூச்சாண்டி பயமுறுத்தலாம். அவா என்னை அடிக்கிறாப்பா!

(எல்லோரும் சிரிக்கின்றனர்.)

தக: (கோபமாக) என்ன, இதெல்லாம் ஒரு விளையாட்டா? நான் போய்விட்டால் அப்பொழுது தெரியும் வண்டவாளம்!

அம்: அப்பா, இன்னிக்குப் போகாதீர்கள். டிக்கெட் கிடைக்காது.

பாச்: டிக்கெட்டா? என்னடி உளறுகிறாய்?

அம்: உனக்குத் தெரியாதா? 'சந்நியாசம்' என்று இன்று ஒரு படம் கிருஷ்ணா தியேட்டரில் ஆரம்பம். அதுக்குத்தான் அப்பா போகப் போகிறார்!

தக: ஏய், துக்கிரிப் பெண்ணே. வாயை மூட மாட்டாய்!

பாச்: அவள் கிடக்கிறாள், அப்பா. நானும் உங்களுடன் வந்துவிடுகிறேன். காசி, ரிஷிகேசம் எல்லாம் சுற்றிவர எனக்கு ஆசையாக இருக்கிறது. ஊரைச் சுற்றிவந்தால் புத்தி விசாலமடையும் என்று வாத்தியார் சொன்னார்.

விச்: அந்தப் பாச்சை பயல் வேண்டாம்பா. அவன் தத்தித் தத்திக் குதித்துத் தொந்தரவு தருவான். வாத்தியார் படுத்தும் பாடும், வீட்டில் இவர்கள் படுத்தும் பாடும் எனக்குச் சகிக்கவில்லை. உங்களோடு வந்தால் 'தங்களது அடி மலர்களைச் சதா போற்றி வணங்கி, தங்களது சேவை அடியேன் பாக்கியமெனக் கருதி என் வாழ் நாட்களை இன்புறக் கழிப்பேன்.'

அம்: அவர்கள் இரண்டு பேரையும் அழைத்துப் போகாதீர்கள். காசி போயும் கழுத்தறுப்பு விடாது.

பாச்: ஏன், நீ கிளம்பப் பார்க்கிறாயோ?

அம்: வேண்டவே வேண்டாம். இங்கே ஒரு வேளை ரொட்டி சாப்பிடுவதற்கே உயிர் எமலோகத்தை எட்டிப்பார்த்து விடுகிறது. இன்னும் வடக்கே போனால் இரண்டு வேளை ரொட்டி என்னை நரகத்தில் தள்ளி விடும்.

விச்: அப்பா, ஆபீஸில் இரண்டு மாத லீவ் எழுதிப் போட்டுவிட்டுப் போங்கள்.

அம்: எதுக்குடா?

விச்: உனக்குத் தெரியாதா? முன்னெல்லாம் சந்நியாசிகளுக்கு மடம் உண்டு. சாப்பாடும் உண்டு. இப்பொழுது ரேஷன் காலத்தில் சந்நியாசிகளுக்கு, 'சோம்பேறிகள்' என்று பட்டம் சூட்டி, சாப்பாட்

டில் மண்ணைப் போடுகிறார்கள். ஒரு வேளை சாப்பாடு இல்லாவிட்டாலே அப்பா வீட்டை ரகளை பண்ணுகிறாரே! நம் அருமை அப்பாவினால் பல நாட்கள் பட்டினி கிடக்க முடியுமா? இரண்டு மாதத்திற்கெல்லாம் கிருகமே தேவலை என்று வந்துவிட்டால் மறுபடி வேலை வேண்டாமா?

தக: (கோபத்துடன்) ஏய், பசங்களா! வாயை மூடப்போகிறீர்களா, இல்லையா? (அடிக்க ஓடி வருகிறார்.)

சர: இருங்கோ, இருங்கோ! அடிக்காதீர்கள். ஒன்று சொல்லிவிடுகிறேன். சந்நியாசிகளுக்கு வேண்டிய குணம் அன்பு, பொறுமை. அதை முதலில் படித்துக்கொள்ளுங்கள்.

அம்: அப்பா, நீங்கள் இப்போ கிளம்பாதீர்கள்.

தக: (கோபமாக) ஏன், ஏன், என்னவாம், உன்னைக் கேட்டுத்தான் கிளம்பணுமா?

அம்: இன்று என்ன கிழமை?

தக: ஏன், இன்று சனிக்கிழமை.

அம்: சனிக்கிழமை ஒரு வேலை ஆரம்பிக்கச் சரியான நாள இல்லை. மேலும் இப்போது கொழுத்த ராகு காலம். இப்பொழுதே சொல்லிவிட்டேன்.

தக: சட், மூடு வாயை! உங்களுக்கு இடம் கொடுத்துக் கொடுத்துச் சைத்தான்களாகப் போய்விட்டீர்கள். நான் ஒரு துரும்புக்குச் சமானம் இப்போ. உங்களெல்லோருக்கும் ஒரு முழுக்குப் போட்டுவிட்டுக் கிளம்பிவிடுகிறேன். நீங்கள் எக்கேடு கெட்டு ஒழியுங்கள். நான் போனால்தான் என்னுடைய அருமை தெரியும் உங்களுக்கு!

(மேல் துண்டைப் போட்டுக்கொண்டு கிளம்புகிறார். எதிரே மாப்பிள்ளை வருகிறார்.)

தக: (முகத்திலே அசடு வழிய) வாணும், வாணும். முதலிலேயே லெட்டர் போடக் கூடாதோ?

மாப்: (சிரித்துக்கொண்டே) திடீரென நேற்று இந்த ஊருக்கே மாற்றிவிட்டு, இன்றைத் தினமே இந்த ஊரில் வேலையில் சேர வேண்டிய ஆர்டரும் வந்தவிட்டதால் கடிதம் போட்டுவிட்டு வர முடியவில்லை. உங்கள் பெண் சரோஜி சாமான்களை எடுத்துக்கொண்டு நாளை வருவாள்.

அம்: அப்பா, எதிரே ஒற்றைப் பிராம்மணன். சகுனம் சேரிலலை; திருப்பி வாருங்கள்.

மாப்: ஓகோ, முக்கியமாக எங்கேயாவது கிளம்புகிறீர்களோ?

அம்: அதெல்லாம் ஒன்றுமில்லை. இன்று மூன்றுவது சனிசகிழமை; ஆபீஸ் லீவ். அடுத்தாத்து மாமாவோடு சீட்டாடக் கிளம்பினார். நான்தான், 'சகுனம் சரியாக இல்லை. தோற்று விடுவீர்கள். திரும்பிவிடுங்கள்' என்றேன்.

(தகப்பனார் உள்பட எல்லோரும் சிரிக்கின்றனர்.)

(திரை)

கே. ஏ. நம்பி

நொண்டிச்

காலை இழந்துவிட்டேன்
—ஐயோநான்
காலை இழந்துவிட்டேன்!

சாலையில் வண்டியேறி
—ஐயோ நான்
காலை இழந்துவிட்டேன்.

வாசலில் தோழரெல்லாம்
—மாலையில்
வட்டுக்க ளோட்டுகின்றார்.

வீசிப்பந் தாடுகின்றார்
—களிப்புடன்
'வீல்' என்று கத்துகின்றார்.

கோலிகள் ஆடுகின்றார்
—தோழர்கள்
தம்மாளம் போடுகின்றார்.

பாலைப்போன்ற நிலவில்
—பாட்டுக்கள்
பாடி மகிழுகின்றார்.

பள்ளிக்குச் செல்லுகின்றார்.
—நல்ல நல்ல
பாடங்கள் சொல்லுகின்றார்.

உள்ளம் மகிழ்கதைகள்
—பலகேட்டு
உற்சாகம் கொள்ளுகின்றார்.

சிறுவன்

காலை இழந்துவிட்டேன்
—அதனால்
கைதிபோல் வீட்டினுள்ளே
மூலையில் வாழுகின்றேன்
—ஐயோநான்
முடவ னாகிவிட்டேன்.

என்ன பிழை செய்தேன்
—ஐயோநான்
ஏது பிழைசெய்தேன்?

என்னைப்போல் துன்பப்
படும்—சிறுவனை
எங்கேனும் கண்டதுண்டா?

நானுமென் தோழருடன்
—விளையாடும்
நாளொன்று வந்திடுமோ?

ஊன முடைந்தகாலும்
—என்றுதான்
உறுதி பெற்றிடுமோ?

கண்ணனை எண்ணித்தினம்
—பக்தியுடன்
கண்ணீர் பெருக்குகின்றேன்.

கண்ணன் மனமிரங்கி
—எனக்குக்
காலைத் தருவதென்றோ?

பொழுது போக்கு

வி. அநஸூயா (A. 8)



இடமிருந்து வலம்: (1) இது ஓர் இந்தியக் கப்பலின் பெயர்; (3) குழந்தைக்கு மிகவும் விருப்பமானது; (5) இதனால் அளக்கலாம்; (6) மைசூரை ஆண்ட மன்னன்; (7) பீமனுடைய ஆயுதம் திரும்பியிருக்கிறது; (8) எய்தவன் இருக்க இதை நோவதில் என்ன பயன்? (10) விபீஷணனுடைய பெண்; சீதைக்கு அசோகவனத்தில் துணை இருந்தவள்; (12) மணிமேகலையின் தாய்; (13) குஸ்திச் சண்டை போடுபவன் இவன்; (15) சிறுவர்கள் இப்படி இருக்க வேண்டும்; (16) இது ஒரு பெண்கள் விளையாட்டு.

மேலிருந்து கீழ்: (1) பாரத தேசத்தின் தலைவர் இவர்; (2) கொஞ்சம் அதிகமானால் கரிக்கும்; குறைந்தால் ருசிக்காது; (3) தாத்தாக்களின் மடியில் அநேகமாக இருக்கும்; (4) சாலைகளில் எட்டுப் பர்லாங்குத் தூரத்தில் பதித்திருக்கும்; (5) இது இருந்தால் மனசுக்குத் தெம்பாக இருக்கும்; (8) டிபன் செய்யலாம்; (9) கிராமந்தோறும் இதற்கு என்று ஒரு நிலையம் ஏற்படுத்தவேண்டும் என்கிறார்கள்: (11) உறுதியற்ற மனசு; (13) விதியை இதனால் வெல்லலாம் என்பார்கள்; (14) ஜாக்கிரதையாக எடுக்காவிட்டால் தவறி உடைந்துவிடும்.

(விடைகள் கடைசிப் பக்கத்தில்)

எக்ஸ்-ரே

புரொபஸர் விஞ்ஞானம்

6
7
மறுபடியும் சந்தேகமிருந்தால் எக்ஸ்ரே அறையில் கையைப் படம் பிடித்தால் ஒடிந்த எலும்பு சரியாய்ப் பொருந்தியி ருக்கிறதா என்று நிச்சயமாய்த் தெரியும்.
8
ஒடிந்த எலும்பு தெரியும் படி எப்படிப் படம் பிடிக்கிறார்கள்?
மின் ஓட்டத்தினுல் ஒளிக்கிரணங்கள் உண்டா கின்றன. அப்போது கண்ணுக்குத் தோன்ருத அல்டிரா - வயலட் கிரணங்களும் வீசுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். அந்த பல்பு ஒளி வீசுவதற்கு அதற்குள் சிறிது பாதரஸ ஆவி இருந்தது.
9
இந்த பல்பின் உட்புறம் அநேகமாக ஒன்றுமில் லாத வெற்றிடம். இந்த பல்பின் உள்ளே அழுத்த மான மின்சாரத்தைச் செலுத்தினுல் மின் அணுக்கள் K-இலிருந்து பாய்ந்து A - இன் மீது மோதும். அப்போது A - இலிருந்து X - கிரணங் கள் வெளிவரும். அவை சதை போன்ற மிருது வான பொருள்களின் ஊடாக எளிதாகச் செல் லும். எலும்பு போன்ற கடினப் பொருள்கள் அவைகளைத் தடுக்கும்
10
A
K
எக்ஸ - ரேக் குழாய்

11
அதைக் கண்டு பிடித்தவர்
ரெண்ட்கென் (Roentgen).
அது ஒரு ரஸமான கதை.
அதைக் கேளுங்கள்.
எக்ஸ்ரேயைக் கண்டு
பிடித்தது யார், ஸார்?
ரெண்ட்கென் (Roentgen).
ஒரு நாள் இரவு லாபரட்டரியில் திரை ஒன்
றில் மினுக் மினுக்கென்று பசுமை நிறமான
ஒளி வீச்சுத் தோன்றியது. அந்த ஒளி க்ரூக்ஸ்
குழாயிலிருந்து வீசி, அதைச் சுற்றிய காகித
அட்டையைக் கடந்து திரையில் தோன்றிற்று.
ஆகையால் க்ரூக்ஸ் குழாயிலிருந்து மிகவும்
சக்தி வாய்ந்த கிரணங்கள் வெளிவருகின்றன
என்று ரெண்ட்கென் தீர்மானித்தார்.
அவற்றின் தன்மைகள் முழுவதும் தெரியாத
படியால் அதற்கு X ரே என்று பெயரிட்டார்.
ஆங்கிலத்தில் X என்று பெயர் தெரியாததைக்
குறிப்பிடச் சொல்வார்கள். இப்பொழுது
அவற்றின் தன்மைகளைத் தெரிந்துகொண்டு
விட்டார்கள்.
12
13
எக்ஸ் - ரேயினால் என்ன
உபயோகம், ஸார்?
முதலாவது வைத்தியத்துக்கு X - ரே
கிரணங்கள் மிகவும் பயன்படுகின்றன.
இந்தப் படத்தில் குழந்தைகள் தவறுத
லாக விழுங்கிய காசும் பொம்மை
சைகிளும் தொண்டையில் அகப்பட்டுக்
கொண்டதைக் காட்டுகின்றன. இதை
X - ரே படம்பிடித்து, இவை எங்கே
சிக்கிக்கொண்டிருக்கின்றன என்று
தெரிந்துகொள்கிறார் ஸர்ஜன். பிறகு,
ஆபரேஷன் செய்து நாணயத்தையும்
சைகிளையும் எடுத்து, குழந்தைகளின்
உயிரைக் காப்பாற்றி விட்டார். இது
இரண்டாம் உபயோகம்.
குழந்தை விழுங்கிய நாணயம்
குழந்தை விழுங்கிய ஸைக்கிள் பொம்மை

குழந்தை தவறுதலாக விழுங்கிய ஊசி
இரண்டா? அடேயப்பா! எக்ஸ்-ரே இன்று பயன்படுவதுபோல வேறு எதுவும் இல்லை என்றுகூடச் சொல்லலாம். நிலக்கரி, ரப்பர் முதலியபொருள்களின் அமைப்பைக் கண்டுபிடிக்கலாம். பாலங்கள் முதலியவற்றைக் கட்டுவதற்கு வேண்டிய கர்டர்கள் உறுதியாக இருக்கின்றனவா என்று கண்டுபிடிக்கலாம். புற்று நோய் க்ஷயரோகம் முதலிய நோய்களுக்கு இதைக் கொண்டு சிகிச்சை செய்யலாம். ரத்தினங்கள் போலியா, உயர்ந்தவையா என்று பார்க்கலாம். பழைய சித்திரங்கள் உண்மையில் புராதனமானவையா இல்லையா என்று பார்த்துவிடலாம். அணுக்களின் உள்ளமைப்பைக்கூடக் காணலாம்.
14
இந்த இரண்டும்தானா?
ஓகோ! எக்ஸ்-ரே ரொம்பப் பிரமாதமானது தான்!
சரி; இந்த யானைக்கதை ஒன்றைக் கேள்! விலை உயர்ந்த மோதிரம் ஒன்றை ஒரு யானை விழுங்கிவிட்டது. அதை எப்படி எடுப்பது? அதை எக்ஸ்-ரே எடுக்க முடிவு செய்தார்கள். யானையின் உடலை பாகம் பாகமாகக் கோடிட்டுப் பிரித்தார்கள். ஒவ்வொரு பாகத்தையும் நம்பரிட்டு தனித் தனியே எக்ஸ்ரே எடுத்தார்கள். மோதிரம் இருந்த பாகத்தை மட்டும் யானையைக் கட்டிப் படுக்கவைத்து ஆபரேஷன் செய்து எடுத்துவிட்டார்கள். யானைக்கு ஓர் ஆபத்தும் ஏற்படவில்லை. மோதிரமும் கிடைத்துவிட்டது.
15
1 2 3 4
5 6 7 8
9 10 11 12

நீச்சல் பழக்கம்

அபாயம்; ஜாக்கிரதை!

1. வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு நீந்தாதே.

2. பரந்த நீர்நிலைகளில் துணையின்றி வெகுதூரம் நீச்சலடிக்காதே.

3. பந்தோபஸ்து இல்லாத நீர் நிலைகளில் காற்றடைத்த ரப்பர் டியூப் முதலிய போலி ஆதாரங்களை வைத்துக்கொண்டு நீந்தாதே.

4. வெடவெடவென்று நடுக்கும் குளிரில் நீந்தாதே.

5. ஆறு, ஓடை முதலியவற்றில் எதிர்நீச்சுப் போடாதே.

6. தடுக்கும்படி ஆடைகளை உடுத்துக்கொண்டு நீந்தாதே.

7. புதிய இடங்களில் போய் முன்பின் தெரியாமல் நீந்தாதே.

★

மிதத்தல் (தொடர்ச்சி)

நீச்சல் ஒரு தேகப் பயிற்சி. ஆபத்துக் காலத்தில் உதவக் கூடியது. ஆகவே பெரியவர்கள் உதவியுடன் இதைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

---

1. சுவரில் உதைந்து கொண்டு, பின்புறமாக நீந்திச் செல்வது ஒரு முக்கியமான பயிற்சி. பின்னால் மல்லாந்து நீந்துவதற்கு நல்ல பயிற்சி தருகிறது.



2

2. மல்லாந்து நீந்தும் நிலையிலிருந்து நிற்கும் நிலையை அடைவது. இந்தப் பயிற்சியினால் உடலில் நல்ல நிதானம் ஏற்படுகிறது. கழுத்தளவுத் தண்ணீரில் இந்தப் பயிற்சியைச் செய்வதுதான் நல்லது.

★

3. பிறகு மல்லாந்து நீந்தும் பயிற்சி. வெள்ளையாகத் தெரியும் பாகம் மட்டுந்தான் தண்ணீருக்குமேலே தெரிகிறது.

4. கை சளைத்துப் போனால் இவ்விதம் தண்ணீரில் மூச்சையடக்கி மிதந்தபடி கிடக்கலாம்.





5



5. மூச்சையடக்கப் பழகுவது நீச்சலில் ஒரு முக்கிய மான அம்சம். இந்தப் பயிற்சியை வீட்டிலேயேகூடச் செய்யலாம். ஒரு தொட்டி ஜலத்தில் முகத்தைக் கவிழ்த்து மூச்சையடக்கப் பழகும் விதம் இது.



6. தரையில பஸ்கி, [illegible] செய்வதுபோல், தண்ணீரில் பிடித்துக்கொண்டே பஸ்கிபோடு வதும் காலால் தண்ணீரை உதைத்து அடிப்பதும் ஒரு தேகப் பயிற்சி. இந்தப் பயிற்சி களால் முதுகும் தொடைகளும் வலுவடைகின்றன.

7. கவிழ்ந்து சாதாரணமாக நீந்துவதும் ஒரு பயிற்சி தான். காலால் உதைத்துக் கொள்ளாமல் கையால் தண்ணீரைத் தள்ளவேண்டும். மூச்சை வெகு நேரமாக அடக்கிவர இந்தப் பயிற்சி உதவும்.

கேட்டீர்களா!

ஸ்ரீமதி எலியனூர் ரூஸ்வெல்ட்

காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலியனூர் ரூஸ்வெல்ட். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கமிஷனின் தலைவராக இப்போது அவர் இருந்து வருகிறார். இவர் சென்னைக்கு வந்தபோது பல நிகழ்ச்சிகளில் பங்கு எடுத்துக்கொண்டார். ஸ்ரீமதி ரூஸ்வெல்ட்டுக்கு 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' என்ற கௌரவப் பட்டத்தை ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத் டில்லி சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவின்போது வழங்கினார்.

புதிய ரெயில் பாதை

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள அறந்தாங்கிக்கும் ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள காரைக்குடிக்கும் இடையே புதிதாகப் போடப்பட்டுள்ள புதிய ரெயில் பாதையை சென்னையின் புதிய கவர்னர் ஸ்ரீ பிரகாஸா மார்ச் மாதம் 29-ஆம் தேதி திறந்து வைத்தார்.

இலங்கைப் பிரதமர்

...போது இலங்கைப் பிரதம மந்திரி சேனநாயகா தவறிக் கீழே விழுந்துவிட்டார். அவருடைய இரண்டு விலா எலும்புகள் முறிந்துவிட்டன. உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். கடைசி வரையில் பிரக்ஞை வராமலேயே மார்ச் 22-ஆம் தேதி காலமானார். இவருடைய முழுப்பெயர் டான் ஸ்டீபன் சேனநாயகா. இவர் குஸ்திச் சண்டையிலும் விளையாட்டுக்களிலும் நிபுணர். சிறிய காலனி நாடாக இருந்த இலங்கையை டொமினியன் அந்தஸ்துக்கு உயர்த்திய பெருமையில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. இவருக்கு வயது 68.

புதிய நாணயச்சாலை

நவீன யந்திரங்களுடன் ஒரு பெரிய நாணயத் தயாரிப்புச் சாலையை அலிப்பூரில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சாலையைக் கட்டி முடிக்க 22 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. ஒரு நாளில் இங்கே 12 லட்சம் நாணயங்கள் உற்பத்தி செய்ய முடியுமாம். அலிப்பூர் என்னும் இடம் கல்கத்தாவுக்குத் தென்கிழக்கில் உள்ளது.

குழந்தைச் சித்திரக் கண் காட்சி

கேலிச் சித்திர நிபுணர் சங்கர் டில்லியில் 'சங்கர்ஸ் வீக்லி' என்று ஒரு பத்திரிகை நடத்துகிறார். இந்தப் பத்திரிகையின் ஆதரவில் சர்வதேசக் குழந்தைகள் சித்திரப் போட்டி ஒன்று நடைபெற்றது. 17 நாட்டுக் குழந்தைகள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டனர். அவர்கள் வரைந்தவற்றில் 1100 படங்களை மட்டும் வைத்து அவர் மியூஸியம் கட்டிடத்தில் ஒரு காட்சி அமைத்திருக்கிறார். 5 வயது முதல் 16 வயதுவரையுள்ள குழந்தைகள் வரைந்த படங்கள் இவை. செக்கோஸ்லோவேகியக் குழந்தைகளின் படங்களில் குழந்தையுள்ளத்தின் கற்பனைச் சிகரத்தைக் காணலாம். ஜப்பானியக் குழந்தைகளின் படங்களில் வர்ணஜாலத்தைப் பார்க்கலாம். இந்தோனேஷியக் குழந்தைகளின் படங்களில் தெய்வாலயச் சிற்பங்களின் கம்பீரம் ததும்பி நிற்கிறது. ருஷ்யக் குழந்தைகளின் படங்களில் சித்திரக் கலை அம்சங்கள் இருக்கின்றன.

கண்ணன் தபால்

டிக்டேஷன்

உபாத்தியாயர் வகுப்பில் டிக்டேஷன் போட்டார். குனிந்த தலை நிமிராமல் ரகு எழுதித் திருத்துவதற்கு வைத்த டிக்டேஷன் இது: "நாம் பிறருக்குத் தீமை செய்யக்கூடாது. நன்மையே செய்ய வேண்டும். என்னடா முழிக்கிறாய்? நாம் ஒருவருக்கு நன்மை செய்துவிட்டு அவர் எப்பொழுது திருப்பிச் செய்வார் என்று எதிர்பார்க்கலாகாது. டேய் மூதேவி, உன்னைத்தான்! அந்த மூலையில் என்னடா சத்தம்! சந்துரு, பெஞ்சிமேலே ஏறுடா!... ஆகையால் நாம் பிறருக்குத் தீங்கு செய்யக்கூடாது. நன்மை செய்தால்... ஏ, கழுதை உன்னை உதைப்பேன். அதனால் நன்மையே...கூடாது! பேசாமல் சொல்வதை எழுதுடா..தீமை செய்தால்..அதுதான் சரி..தீமை.. முழிக்கிறதைப் பார்! விளையும்..சரி; எல்லாரும் எழுதினது போதும்; நோட்டைக் கொண்டாங்கடா."

—N. 149.

* * *

உல்லாசப் பிரயாணம்

மயிலாப்பூர் கண்ணன் கிளைக் கழக அங்கத்தினர்கள் (சிறுவர்கள்) எல்லாரும் 2—10—'51 அன்று எழும்பூர் மியூஸியத்திற்குச் சென்றோம். அங்கு பழையகாலத்துச் சிற்பங்களையும் பழங்கால மனிதர்கள் வாழ்ந்த விதத்தையும் கண்ணாரப் பார்த்து உளம் மகிழ்ந்தோம். இதுவரை பார்த்திராத எவ்வளவோ புதுவகைப் பாம்புகளையும் பழைய போர்க்கருவிகளையும் கண்டோம். சுமார் எழுபது அங்கத்தினர்களுக்கு மேல் கூட்டமாக, கலகலவென்று பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் சென்றது எங்களுக்கு மட்டில்லாத மகிழ்ச்சியைக் கொடுத்தது. எல்லாரும் சௌகரியமாக மாலை வீடு வந்து சேர்ந்தோம்.

V. A. சுந்தரமூர்த்தி (S.356).

* * * *

அப்பா செய்த வேலை

அன்பார்ந்த ஆசிரியர் அவர்களே!

நான் மூன்று கூபன்களைப் பூர்த்தி செய்து அனுப்பி நாலு மாதங்களுக்கு மேல் ஆயின. இப்பொழுதுதான் என் பெயர் இன்னும் கண்ணனில் வராத காரணம் தெரிகிறது. என்னைக் கேட்கா

மலே என் அப்பா என் குழந்தைப் பருவத்தில் வாசுதேவன் என்ற பெயரை வைத்துவிட்டார். பெயர் அழகாயிருந்தாலும் V என்ற ஆங்கில எழுத்தில் ஆரம்பமாவதால் கடைசியில்தான் கண்ணனில் வெளிவரும். ஆனால் என் சிறிய தங்கை விஷயத்தில் இந்தத் தப்பு நிகழாமல் இருப்பதற்காக அவளுக்கு நான் A என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் அநுராதா என்ற பெயரை வைத்திருக்கிறேன். நான் சமர்த்துத்தானே?

ஏ. டி. வாசுதேவன், (K. 781), கல்கத்தா 29

(ஆட்சேபணையில்லாமல் - ஆ-ர்.)

*　　*　　*　　*

பாதாளச் சிறை

பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கடம்பவனம் ஜமீன்தார் தம் கோட்டையில் ஓர் இளவரசனைச் சிறை வைத்திருந்தார். அந்தப் பாதாளச் சிறையின் அமைப்பைத்தான் இந்தப் படம் காட்டுகிறது. இதில் 63 அறைகள் ஒன்றின் வழியாக மற்றொன்றுக்குப் போகும்படி இருக்கின்றன. படத்தில் குறிப்பிட்ட இடத்தில்தான் இளவரசன் கட்டுண்டு கிடந்தான். ஒரு வீரன் இளவரசனை மீட்க வந்தான். முதல் அறைக்குள் நுழைந்தவன் ஒவ்வோர் அறையிலும் ஒரே தடவை நுழைந்து, கடைசியாக இளவரசனை மீட்டு விட்டான். அவன் எப்படிப் போயிருப்பான் என்று ஒரு பென்சிலை வைத்துக் கொண்டு கோடுபோட்டுப் பாருங்கள். அவன் வெளிவந்த வழி 22 நேர் பாதைகளில் இருக்கவேண்டும். உங்களால் முடியாவிட்டால் கடைசிப் பக்கத்திலுள்ள விடையைப் பாருங்கள்.



—வி. ஆர். (R. 1169) சென்னை, 4.

*　　*　　*　　*

நீங்கள் நினைத்த எண்

நீங்கள் 7-க்குமேல் 100-க்குள் ஓர் எண்ணை மனத்தில் நினைத்துக் கொள்ளுங்கள். அந்த எண்ணை 3-ஆல் வகுத்து மீதியைச்

சொல்லுங்கள். அதேபோல 5-ஆல் வகுத்துச் சொல்லுங்கள். பிறகு 7-ஆல் வகுத்துச் சொல்லுங்கள். இப்பொழுது நீங்கள் நினைத்த எண்ணை நான் சொல்லிவிடுவேன்.

எப்படித் தெரியுமா?

நீங்கள் 20-ஐ நினைத்துக்கொள்ளுங்கள். அதை 3-ஆல் வகுத்தால் மீதி 2. 5-ஆல் வகுத்தால் மீதி 0. 7-ஆல் வகுத்தால் மீதி 6. கண்டு பிடிக்கும் விதம்: மூன்றால் வகுத்து வந்த மீதி 2ஐ 70-ஆல் பெருக்கவேண்டும்:

மூன்றால் வகுத்து வந்த மீதி 2ஐ 70-ஆல் பெருக்கவேண்டும்:	140
5-ஆல் வகுத்த மீதி 0ஐ 21-ஆல் பெருக்கவேண்டும்:	0
7-ஆல் வகுத்த மீதி 6ஐ 15-ஆல் பெருக்கவேண்டும்:	90
மொத்தம்:	230

இவ்விதம் கூட்டிய மொத்தம் 100-க்குள் இருந்தால் நீங்கள் நினைத்தது அதுவேயாகும். 100-க்குமேல் 210-க்குள் இருந்தால் 105-ஐக் கழித்துச் சொல்லவேண்டும். 210-க்குமேல் இருந்தால் அந்த மொத்தத்தில் 210-ஐக் கழித்து — [illegible]

மொத்தம்	230
கழிக்க வேண்டிய எண்	210
நீங்கள் நினைத்த எண்	20

உங்கள் நண்பருடன் இதைக் கேட்டுச் சரி பாருங்கள்.

—கே. சேதுமாதவன், கரூர்.

*　*　*　*

பந்து

சந்தைக்கடை சென்றுநான்
சல்லிபத்து நீட்டியே
பந்து ஒன்று வாங்கினேன்
'பகு குஷி'யாய் ஆடினேன்!
தரையிலிட்டால் துள்ளிடும்
துள்ளிவானில் சென்றிடும்
விரைந்து பின்னும் மண்ணிலே
விழுந்து நன்றாய்த் துள்ளிடும்!
துள்ளும் பந்தைப் போலவே
துள்ளிவிளை யாடுவேன்!
துள்ளிவிளை யாடினால்
உள்ளம்களித் தாடுமே!

'சசிதேவன்', நாகர்கோவில்.

*　*　*　*

விடுகதை

உடலுயிருடன் ஊர்திரிவான்; மனிதனல்ல! உள்ளபடி பேசிடுவார்; வாய்தானில்லை! ஒரு பொழுதே உண்டிடுவார்; யோகியல்ல! உண்மையுடன் இக்கதையை உரைத்திடுவீரே.

K. J. V.—விடுகதைப் புதையல்.

விடை: [illegible]

விடைகள்: பாதாளச் சிறை



முதல் அறையில் நுழைந்தவுடன் மறுபடியும் நேராகத் திரும்பிச் சென்றால்தான் இது சரியாக வரும்.

*   *   *   *

பொழுது போக்கு விடைகள்

இ. வ: 1. ஜலஉஷா. 3. பொம்மை. 5. படி. 6. மதிப்பு 7. கதை. 8. அம்பு. 10. திரிசடை. 12. மாதவி. 13. மல்லன். 15. திடம். 16. அம்மானை.

மே. கீ: 1. ஜனாதிபதி. 2. உப்பு. 3. பொடி. 4. மைல்கல். 5. பணம். 8. அடை. 9. புத்தகம். 11. சபலம். 13. மதி 14. பானை.

*   *   *   *

கிளைக் கழகப் படம்

நாமக்கல்லில் பெண்களின் கண்ணன் கிளைக் கழகக் கூட்டம்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இப்போது 9600 பேருக்குமேல் இதில் நிரந்தர அங்கத்தினராக இருக்கிறார்கள். இமயம் முதல் குமரிவரையிலும் இன்னும் இலங்கை, மலேயா, முதலிய வெளிநாடுகளிலிருந்துங்கூட பல அங்கத்தினர்கள் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

உங்களுக்கு இதில் சேர வேண்டுமென்று ஆசையாக இருக்கும். இதுவரையில் நீங்கள் சேராமல் இருந்தால் இப்பொழுது கூடச் சேரலாம். சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பினால் போதும். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். ஆனால் தலைக்கு மூன்று கூபன் விதம்தான் அனுப்பவேண்டும். அவ்வப்போது கண்ணனில் போட்டிகள் வெளியாகின்றன. இவற்றில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

பம்பாயிலிருந்து வந்த பாட்ஜுகள் தீர்ந்துவிட்டன. இதுவரை பாட்ஜு பெறாத அங்கத்தினர்களுக்கு மறுபடி வந்ததும் அனுப்பப்படும்.

REG. No. M. 5542.

கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்காக என்று திட்டமிட்டு நல்ல ஸ்வாரஸ்யமான கதைகளாகப் பொறுக்கிச் சேர்த்துச் சில புத்தகங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்தப் புத்தகங்களில் நிறையப் படங்களும் இருக்கின்றன. உங்கள் மனத்தைக் கவரும் கதைகள்; படங்கள்.

இப்போது தயாராக இருக்கும் புஸ்தகங்கள்:

1. **ராஜாவும் குருவியும்** "சோமசன்மா" அணா 8

ராஜாவும் குருவியும், ஆமையும் முயலும், காளையும் நாயும், நாயும் நிழலும், பிராம் மணனும் பொன் காப்பும், நரியும் திராட்சையும், சுண்டெலியும் சிங்கமும் என்ற ஏழு கதைகளின் தொகுதி.

இதே பெயரில் நீங்கள் படித்திருக்கும் பழைய கதைகளல்ல இவைகள். படித்துப் பாருங்கள்.

2. **கழுகும் கிளியும்** "சோமசன்மா" அணா 8

கழுகும் கிளியும், ஏமாறுத காக்காய், நண்டும் கொக்கும், புலித்தோல் போர்த்த கழுதை, குரங்கும் ஆப்பும், காக்கையின் தாகம், கழுதையும் நாயும் என்ற ஏழு புதுக் கதைகளின் தொகுதி.

3. **தவளையும் காளையும்** "சோமசன்மா" அணா 8

தவளையும் காளையும், நாவல் மரத்துக் குரங்கு, கூடா நட்பு, ஓநாயும் ஆட்டுக் குட்டியும், குரங்கு நியாயம் என்ற ஐந்து புதிய கதைகள்.

4. **கோழி விதைத்த நெல்** "சூடாமணி" அணா 3

பாட்டாகப் பாடும் கதை.

5. **தங்கத்தின் பந்து** "சூடாமணி" அணா 3

தங்கத்தின் பந்து, சண்டை போட்ட நாய்க்குட்டிகள், காட்டுப்பூனையும் குழந்தையும் என்ற மூன்று கதைகள்.

6. **என் பேர் என்ன?** "சூடாமணி" அணா 3

பாட்டுக்கதை.

கண்ணன் அங்கத்தினர்களுக்கு $12\frac{1}{2}\%$ கமிஷன் உண்டு.